சுதந்திரன்
SUTANTIRAN
விலை சதம் 25. தொலை பேசி: 23411
வள்ளுவர் ஆண்டு 2003, தை 2உ (16-1-72) ஞாயிறு 1391 துல்கஃதா 28 புத்தகம் 25 இதழ் 9

## குடியரசுத் தினத்தை தமிழ் பேசும் மக்கள் பகிஷ்கரிப்பர்!

# ஈழ தமிழகமெங்கணும் கறுப்புக் கொடி பறக்கும்

## இம்மாத இறுதியில் யாழ். நகரில் அதிமுக்கிய அரசியல் மாநாடு!

இந் நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை ஜீவாதார உரிமைகளை அடியோடு மறுத்து—தமிழ் பேசும் மக்களை மீளா அடிமைப் படுகுழியில் தள்ளி வீழ்த்தும் மரண சாசனமான புதிய தனிச் சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசியல் சட்டம் முதன் முதலாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் நாளை—அதாவது குடியரசு நாளை தமிழ் பேசும் மக்கள் துக்கதினமாக அனுட்டிப்பார்கள். தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அன்றைய தினம் காணுமிடமெங்கணும் நீக்கமற கறுப்புகொடிகள் பறக்கும்.



—இவ்வாறு யாழ். மாநகர சபை மண்டபத்தில் கடந்த 8—1—72 அன்று நடைபெற்ற பங்களாதேஷ் வெற்றி விழாக் கூட்டத்தில் பேசிய காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் மக்களின் பலத்த ஆரவாரத்திடையே தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்புத் திட்டம், தமிழ் இனத்தை எப்படி எப்படிப் பாதிக்கின்றது என்பதை மக்களுக்கு எடுத்து விளக்கவும், புதிய அரசியலமைப்பு பற்றி தமிழ் பேசும் இனத்தின் கருத்துக்களை ஆட்சியாளருக்கும் வெளியுலகத்துக்கும் தெரியப்படுத்தவும அதிமுக்கியம்

(11ம் பக்கம் பார்க்க)

## இலக்கியவிழா பகிஷ்கரிப்பு!

தமிழையும், தமிழ் கலாசாரத்தையும் ஒழித்துக் கட்டி, சிங்களத்தையும் சிங்கள கலாசாரத்தையும் தமிழ் மக்களின் தொண்டைக்குள் திணித்துவரும் கலாசார அமைச்சு இன்று யாழ் நகரில் நடத்தும் கண் துடைப்பு இலக்கிய விழாவை தமிழுணர்வும் தன்மானமுமுள்ள தமிழ் எழுத்தாளர்களும் மற்றும் தமிழ மக்களும் முற்றாகப்பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்துள்ளனர்.

தமிழ்மொழியை கழுத்தை திருகிக்கொன்று விட்டு, அதற்கு கருமாதி செய்வது போன்றதே கலாசார பேரவை நடத்தும் தமிழிலக்கிய விழா என்று தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

★ கலாசாரப் பேரவை நடத்தும் மேற்படி தமிழ் இலக்கிய விழாவுக்கான அழைப்பிதழில் முதலில் சிங்களமே இடம் பெற்றுள்ளது; இது தமிழ் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தை திணித்து—தமிழர் தலைநகரில் நடைபெறும் தமிழ் விழாவிலும் சிங்களத்துக்கே முதலிடம் தரப்படும் என்று உறுதிப்படுத்துகிறது.

(11ம் பக்கம் பார்க்க)



## பொதுச்செயலாளர் தரும் பொங்கல் செய்தி!

"வங்கத்தில் வீசிய விர சுதந்திரக்காற்று ஈழத்தமிழ விடமும் புதிய எழுச்சியையும் இன விடுதலை வேட்கையையும் ஊட்டி விட்டுள்ள இன்றைய சூழ்நிலையில்—மலரும் தமிழர் புத்தாண்டில் தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது இதய வாழ்த்துக்கள்!

"உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்யும் தமிழர் திருநாளாம் இத்தைத் திருநாளில், தமிழினத்தின் அடிமைத்தளையறுத்து, தமிழன்னைக்கு மணிமகுடம் சூட்டியே தீருவோம் என்று ஒவ்வொரு தமிழனும் உறுதி எடுப்போம்.



"ஆண்டபரம்பரை நாம்—யாருக்கும் அடிபணியாத இனத்தினர் நாம்-தனியரசு நடத்தியவர்கள் நாம்—இன்று அந்நிய சிங்களத்துக்கு அடிமையாகி அழிந்தொழிந்து போக ஒருபோதும் ஒருப்படோம்!

அறம் வெல்லும் என்பதில் அசையா நம்பிக்கை வைத்து—தியாகத்தீயில் குளித்து—வியர்வை, இரத்தம், கண்ணீர் சிந்தி சுதந்திரப் பயிர் வளர்ப்போம்; நமக்கென்றோர் அரசு அமைப்போம்! இது நிச்சயம்!!

"எங்கள் பகைவர் எங்கோ மறைவர் இங்குள்ள தமிழர் நாம் ஒன்றாகிவிட்டால்"

அன்பன்,
அ. அமிர்தலிங்கம்.

## திருமண அழைப்பு

1972ம் ஆண்டு சனவரி மாதம் 20ம் திகதி வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பிலுள்ள (டச் றிபோர்ம்ட் சேர்ச்சுக்கு உரித்தான) தென்னிந்திய திருச்சபைத் தேவாலயத்தில் எமது திருமணம் நடைபெறும். இதில் கலந்து திருமணத்தைச் சிறப்பிக்கும் வண்ணம், எமது உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் மகிழ்வுடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,
செல்வநாயகம் சந்திரகாசன்,
நிர்மலா நாகநாதன்.

குறிப்பு:— தனித்தனியாக அழைப்புக்கள் அனுப்பப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— அனைவருக்கும் எமது இதயங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

# எண்ணம்

## விடுதலை உணர்வு பொங்கட்டும்!

தை பிறந்தால் வழிபிறக்கும் என்று கூறப்படுவதுண்டு. ஒவ்வோராண்டும் தையும் பிறந்துகொண்டுதானிருக்கிறது. ஆனால் இந்நாட்டுத் தமிழினத்தின் தொல்லைகளும் துன்பங்களும் தீரவழிதான் இன்னும் பிறந்தபாடில்லை!

இந்நாட்டில் இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் ஏனைய இனங்கள் இந்த மண்ணில் காலடி எடுத்துவைப்பதற்கு முன்பிருந்தே — வரலாற்றுக்கெட்டாத காலத்திலிருந்து — தமிழன் இந்நாட்டில் தலைநிமிர்ந்து உரிமையுடன் வாழ்ந்து வந்திருக்கிறான்.

தனக்கென தனியானதோர் தமிழரசு கண்டு, தமிழைப்போற்றி வளர்த்துவந்திருக்கிறான்.

இலங்கை முழுவதையுமே ஒரு காலத்தில் தனது ஆட்சிக்குள் கட்டியாண்டிருக்கிறான்.

இந்நாட்டில் நுழைய முயன்ற அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக கடுமையாகப் போராடியிருக்கிறான்!

இறுதியாக ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் முன்னணி வகித்தவனும் தமிழனே:

அப்படிப்பட்ட தமிழன் இன்று,
மொழியுரிமை,
குடியுரிமை,
நில உரிமை,
ஆட்சியுரிமை,
தொழிலுரிமை
போன்ற சகல அடிப்படை உரிமைகளையும் இழந்து சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் அடிமையாக — ஆளப்படும் இனமாக — இரண்டாம்தரக் குடிமகனாக — ஆக்கப்பட்டுள்ளான்.

வரவிருக்கும் சிங்கள பௌத்த குடியரசு அரசியலமைப்பு தமிழினத்தின் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் மறுத்து — தமிழினத்தை அடிமைப்படுகுழியில் தள்ளப்போகிறது —

இந்நிலையில் — பொங்கல் திருநாளில் — தை முதல் நாளில் — இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழனும் பின்வரும் கேள்விகளைத் தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும்!

நாம் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியக் குடியரசின்கீழ் அடிமைத்தனத்தை ஏற்று அழிந்தொழிந்து போகப்போகிறோமா? அல்லது அடிமைத் தனத்தை எதிர்த்து போராடி நமது விடுதலையை நிலைநாட்டப் போகிறோமா?

நமது இனத்தின் தனித்துவத்தை பாதுகாத்து — நமது கலாசாரத்தையும் பிரதேசத்தையும் பாதுகாத்து — நம் உயிருக்குயிரான மொழியைப் பாதுகாத்து — தலைநிமிர்ந்து தன்மானமுள்ள மக்களாக வாழப்போகிறோமா? அல்லது சிங்கள மொழியை ஏற்று, சிங்கள கலாசாரத்தை தழுவி, நமது தனித்துவத்தை இழந்து அழிந்தொழிந்திடப் போகிறோமா?

அஞ்சியும் கெஞ்சியும், அடிமைகளாக வாழ்வதைவிட அழிந்தாலும் வாழ்ந்தாலும் சுதந்திரத்துக்குப் போராடுவதே தன்மானமிக்க ஓர் இனம் பின்பற்றக்கூடிய பாதையாகும் — அதையேதான் வங்க இனமும் பின்பற்றி — இன்று வெற்றிவாகை சூடியிருக்கிறது.

அடிமை வாழ்வா — விடுதலை வாழ்வா என்பதை தமிழினம் இறுதியாக முடிவுசெய்ய வேண்டிய கட்டம் இன்று வந்துவிட்டது.

ஆண்மைமிக்க தமிழினம் — நிச்சயம் அடிமை வாழ்வை ஏற்காதென்பது நமது திடமான நம்பிக்கையாகும்!

எனவே இப்பொங்கல் புது நாளில் தமிழினத்தை பிடித்துள்ள அச்சமும், அடிமை மோகமும் அடியோடு தொலையட்டும்! கிழக்கில் எழும் செழும்பரிதி சுதந்திரச் சுடரை தமிழன் உள்ளத்தில் மூட்டட்டும்!!

பால் பொங்குவதுபோல் —

தமிழன் உள்ளத்தில் விடுதலை உணர்வு பொங்கட்டும்!!
தன்மான உணர்வு பொங்கட்டும்!!
வீரமும் விவேகமும் பொங்கட்டும்!!!

## 'ஒன்றுபடுவோம்—உரிமை காப்போம்'

### இராசமாணிக்கம் தரும் பொங்கல் செய்தி



"தமிழ் பேசும் மக்களின் அரசியல் வரலாற்றில் நெருக்கடி மிகுந்துள்ள நேரத்தில் புதிய ஆண்டு பூத்திருக்கிறது; பொங்கலும் வந்திருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில் ஒன்றே ஒன்றை மட்டும் இத்தருணத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்;

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். இனத்தாலும் பேசும் மொழியாலும், விடுதலை உணர்வாலும் ஒன்றுபட்டு நிற்கும் தமிழ் பேசும் மக்களை வடக்கு, கிழக்கு, மலைநாடு என்று கூறிய பிரதேச ரீதியில் கூறுபோட்டுப் பிரித்து தமிழினத்தை அழித்துவிடத் தமிழினத்தின் எதிரிகள் திட்டமிட்டுச் சூழ்ச்சியிலீடுபட்டிருக்கிறார்கள். இந்நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் விழிப்புடனிருப்போமாக!

தமிழன் எங்கு வாழ்ந்தாலும் அவன் தமிழன் தான்; வடக்கு, கிழக்கு, மலையகம் என்கின்ற பிரதேசப்பிரிவினைகள் எதுவும் தமிழனிடம் கிடையாது. தமிழுக்கு ஏற்றம் கண்டிட வேண்டும். தமிழினத்துக்கு அரசியல்விடுதலை பெற்றாக வேண்டும். இதுவே நம் பேச்சும், மூச்சும், சிந்தனையும்செயலுமாக மாறட்டும்!

## தங்கத்துரை பொங்கல் வாழ்த்து!

இன்பநாள் இனியநாள், தங்கத்தமிழ் இனத்தின், தனிப்பெரும் திருநாள், எங்கள் பொங்கல்த் திருநாள், உழவர்களின் உயர்ந்த இல்லுளில், பொங்கிப்படைத்து, இறைவனை வழிபட்டு, இன்பமாக வாழ்கின்றோம்.

ஆனால்,

எங்கள் பொங்கல் திருநாளை தமிழ் இனம், இந்த நாட்டில் தொடர்ந்து இன்பமாகக் கொண்டாட முடியுமா? எமது கலை, கலாச்சாரம் இந்த நாட்டில் சிறப்புடன் வாழ முடியுமா? என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பாருங்கள் எமது தாயகமாம் இந்த ஈழத்தில் நாம் இன்று உரிமையற்றவர்களாக வாழ்கின்றோம்; ஆட்சி புரிந்த நாம் இன்று அடக்கு முறைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். எனவே நாம் அனைவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

எமது கலையைக் கலாச்சாரத்தை, உரிமையை பாதுகாக்க உழைக்கும் தந்தை செல்வாவின் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஒன்று கூடி அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உழைக்கும் கடமை ஒவ்வொரு தமிழர்களின் தலையான கடமையாகும். நாம் அனைவரும் ஒன்றாக செயல்பட்டு உழைக்க முன்வாருங்கள் என்று இந்த பொங்கல் திருநாளில் வேண்டி எனது இனிய பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

—

## தமிழரசு காரை நகர் கிளைகூட்டம்!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காரைநகர் கிளையின் வருடாந்தக் கூட்டம் 16. 1. 72 ஞாயிற்றுக்கிழமை மாலை 7. 00 மணிக்கு காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் தலைவர் திரு. சி. ஆ. கணபதிபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறும். இலங்கை தமிழ் அரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் ஏனைய தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குபற்றுவார்கள். தமிழ் அரசுக் கட்சியின் கொள்கையைப் பின்பற்றும் அன்பர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.

—இவ்வாறு தமிழரசுக் கட்சியின் காரைநகர்க் கிளை [illegible] அமிர்தலிங்கம் அறிவிக்கிறார்.

## பங்களா தேஷை அங்கிகரிக்க கோரிக்கை!

விடுதலை பெற்ற 'பங்களா தேஷ்' உடனடியாக அங்கீகரிக்க வேண்டுமென்று இலங்கை அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் 9-1-72ல் யாழ். மாநகரசபை மண்டபத்தில் தமிழரசுக் கட்சி நடாத்திய வங்கதேச வெற்றி விழாக்கூட்டத்தில் குழுமியிருந்தபெருந்தொகையான பொது மக்களின் பலத்த கரகோஷத்திடையே நிறைவேற்றப்பட்டது:

இத்தீர்மானத்தை உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் முன்மொழிய திரு. மு. ஆலாலசுந்தரம் வழிமொழிந்தார்.

—

## வள்ளுவர் ஆண்டு 2003 ஆரம்பம்!

திருவள்ளுவர் ஆண்டு 2003 தை முதல் நாளிலிருந்து (15. 1. 72) ஆரம்பமாகிறது. தை முதல் நாளிலிருந்தே தமிழ் கூறும் நல்லுலகெங்கும் வள்ளுவர் ஆண்டு பின் பற்றப் பட்டு வருவது தெரிந்ததே.

—

## ஈழத் தமிழக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ந்த அரசியல் மாநாடொன்றை இம்மாதம் 29-ம் 30-ம் நாட்களில் யாழ் நகரில் கூட்டுவதென்று தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது.

யாழ். மாநகர சபை மண்டபத்தில் இரு நாட்களாக நடைபெறவிருக்கும் இந்த மாநாடு, நெருக்கடி மிகுந்த இன்றைய அரசியல் நிலையில் மிகவும் முக்கியமானதாகும். இம் மாநாட்டின் இறுதியில் எடுக்கப்படவிருக்கும் அரசியல் தீர்மானங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு புதிய எழுச்சியை ஊட்டப்போகின்றன.

புதிய அரசியலமைப்பை இந்த மாநாடு முற்று முழுவதாக நிராகரிக்குமென்றும் தமிழ் பேசும் மக்களின் அடுத்த நடவடிக்கை பற்றி இங்கு முடிவு செய்யப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இம் மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக திரு. நா. த. செல்லத்துரையும் இணைச் செயலாளர்களாக அட்லேறு ஆலாலசுந்தரம், திரு. இ. ப. குணரத்தினம் ஆகியோரும் பொருளாளராக திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. வும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தேர்தலை மார்ச் 18-ம் நாள் வவுனியா நடத்துவதென்றும் கட்சியின் 12வதுமாநில மாநாட்டை நடப்பாண்டு ஏப்ரல் 28, 29, 30-ம் நாட்களில் முன்பு திட்டமிட்டபடி கிளிநொச்சியிலேயே நடத்துவதென்றும் தமிழரசு மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

## இலக்கிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அவமானத்தை—தமிழ் அன்னையை பின்னுக்கு தள்ளி சிங்களத்துக்கு முதலிடம் தருவதை—மானமுள்ள எந்த தமிழனும் பொறுத்துக் கொள்ளமாட்டான். தமிழையும் தமிழரையும் இப்படி வேண்டுமென்றே அவமானப்படுத்தியுள்ளது 'கலாசார அமைச்சு.

★ தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து கொண்டிருந்த தமிழ் பத்திரிகைகளும் இலக்கிய சஞ்சிகைகளும் இப்போது தடை செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையேயிருந்து வரும் தமிழ் கலாசார உறவைத் துண்டிக்க முயற்சி நடக்கிறது. தனிப்பட்டவர்கள் தமிழக சஞ்சிகைகளை சந்தா மூலம் தருவிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது: இப்படி தமிழ் கலாசாரத் தொடர்புகளை சிதைத்துக் கொண்டே கலாசார பேரவை யாரை ஏமாற்ற விழா நடத்துகிறது?

★ கலாசார பேரவை தமிழ், சிங்கள இலக்கிய வளர்ச்சியில் கடைந்தெடுத்த பாரபட்சம் காட்டி வருகிறது: சிங்களத்தில், 10 துறைகளுக்கு பரிசு வழங்க ரூபா 11,000 த்தை ஒதுக்கியுள்ள கலாசார அமைச்சு, தமிழுக்கு ஆக மூன்று துறைகளுக்கு மட்டும் ரூபா நாலாயிரத்தை பரிசுத் தொகையாக ஒதுக்கியுள்ளது.

★ கலாசாரத்துறை டைரக்டர் ஈழத்தமிழர்களுக்கு பரத நாட்டியம் சொந்த மானதல்ல வென்றும் வேறு சொந்தமான நாட்டியமே ஈழத்தமிழர்களுக்கு கிடையாதென்றும் விழல் தனமாக கூறி தமிழினத்தை அவமதித்தார்.

★ உண்மையான — தன்மானமும் தமிழுணர்ச்சியுமுள்ள தமிழ் எழுத்தாளர்களின் தரமான படைப்புக்களை கௌரவிக்காமல், அரசுக்கு காக்காய்பிடித்து முதுகு சொறிபவர்களின் நூல்களுக்கே கலாசாரப் பேரவை பரிசு வழங்குகிறது—

இதுபோன்ற பல்வேறு காரணங்களால் கலாசாரப் பேரவை நடாத்தும் கண்துடைப்பு இலக்கிய விழாவை பகிஷ்கரிப்பதென்று தமிழ் எழுத்தாளர்களும், தமிழ் அபிமானிகளும் 'முடிவுசெய்துள்ளனர்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மால் ஏன் முடியாது?

அன்பு நண்பா,

பொங்கல் விழாவாம் பொங்கல் விழா; விழா என்ன வேண்டியிருக்கிறது இன்றைய நிலையில்; துக்கம் அன்றோ துளைத்திடுகிறது நெஞ்சை! இச்சகம் பேசி இனத்தைக் காட்டிக் கொடுக்கின்றனர் தமிழ் குலத்தில் பிறந்திட்ட கோடரிக் காம்புகள் சிலரே! தமிழ் உரிமைகளை துச்சமென மதித்து, ஆண்ட நம் இனத்தை அடிமைப்படுத்திடும் அரசியல் சட்டமன்றோ கொண்டுவர விருக்கின்றனர் சிங்கள ஆட்சியாளர்; இந்நிலையில்-வேதனையும் சோதனையும் நமக்கு எதிர்நோக்கிவிருக்கின்ற சூழ்நிலையில்—விழாக்கொண்டாடி மகிழ்ந்திடுவதெவ்வாறு;விழாவின் சுவைபற்றி எடுத்துரைத்தல் எவ்வாறு;என்றெல்லாம் என்னுள்ளம் குமுறிய படியிருந்திடினும் பொங்கல்திருநாளில் எனது மடலைக்காணுவிட்டால் உன் உள்ளம் மழை கண்ட குயில் போல் வாடிடுமென்பதை நான் உணர்வேன்.

நண்பா, பொங்கல் திருநாள் புத்தெழுச்சியையும், புதிய சுவையையும் புதிய எண்ணங்களையும் நமக்குத் தந்திடும் திருநாள். பாட்டும் கூத்தும், பண்ணும் பரதமும் எங்கும் இனிய சுவை தந்திட — முக்கனியும் சர்க்கரையும் நற்கருப்பஞ்சாறும் தேனும் தித்திக்கும் ஆவின் பாலும் கொண்டு மாம்பழக் கன்னத்தாள் பொங்கிடும் பொங்கலை உண்டு — பொங்கல் சுவையா அதைத்தந்தவளின் இதழ் சுவையா எது அதிகம் சுவையுடைத்து என்பதையறிய முற்படும்போது — 'அப்பா' என்றழைத்திடும் மழலைக் குரல் கேட்டு பொங்கலையும், பொன்மகளின் இதழையும் விடச் சுவையுடையது; குழலையும், யாழையும் விட இனியது மழலைக்கனியமுதென்பதறிந்து, மகிழ்ச்சியில் கல கல வென்று சிரிப்பொலியெழுப்பி மகிழ்ந்திடும் சித்திரத்தை நிறை காட்சியினை தமிழர் இல்லங்களில் காணலாம் பொங்கல் திருநாளில்!

எங்கும் மகிழ்ச்சி பொங்கிடவேண்டும்; இல்லாமையும் ஏழ்மையும் இல்லாதொழிந்திட வேண்டும்; பஞ்சமும் பசியும் இப்பாரைவிட்டு ஓடிடவேண்டும்; எல்லோரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்திடவேண்டும்: 'இல்லாருமில்லை: உடையாருமில்லை என்கின்ற சமதர்மம் தோன்றிடவேண்டும்; உழைப்பவனுக்கு உரிய இடம் தந்திடவேண்டும்; என்கின்ற உயர்வான பெரு நோக்குடன் தமிழன் கண்ட விழாதான் பொங்கல் விழா;

இன்று இந்நாட்டில் தமிழனுக்கு 'சோசலிசம்' கற்றுத்தர புறப்பட்டிருக்கின்றனர் சில புல்லுருவிகள்; ஆனால் உலகில் தமிழனுக்கு யாரும் 'சோசலிசத்தை' சொல்லித்தரவேண்டியதில்லை; 'சோசலிசம்' தமிழனுக்கு தெரியாத — புரியாத புதிய கருத்தல்ல என்பதனை தாரணிக்கு உணரவைத்திடும் திருநாள் பொங்கல்!

தமிழன் சோசலிசவாதிதான்: 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகியற்றியான்' என்றும் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப' வேண்டுமென்றும் கூறிவைத்தவன் தமிழன் தான். ஆனால் தமிழன் கண்ட சோசலிசம் தன்னுடைய மொழியை, தன்னுடைய இனத்தை, தன்னுடைய நாட்டை, வேற்றினத்தானுக்கு விலைபேசி விற்காத சோசலிசம். தமிழை இழக்காமல்தான் தமிழன் சமதர்மம் கண்டான் என்பதனை பொங்கல் திருநாளில் நாம் புரிந்துகொண்டிடவேண்டும்;

''யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா......''

என்பதுதான் புற நானூற்றுத் தமிழன் கண்ட உலக ஒருமைப்பாடும், தமிழின ஒருமைப்பாடும்! 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதனை பலமாக எடுத்துக்கூறும் சிலர் அதற்கு அடுத்த அடியான 'தீதும் நன்றும் பிறர் தாவாரா' என்பதனை மறந்து விடுகிறார்கள். இதை மறந்த காரணத்தால்தான் இற்றைத்தமிழன் அடிமையாக வாழுகிறான்!

நண்பா, பொங்கல் விழா 'ஞாயிறு போற்றிடுவதற்கு' மட்டும் அல்ல; சுற்றமும் உறவும், நண்பரும் சூழ விருந்துண்டு களித்திடுதற்கு மட்டுமல்ல — அற்றை நாள் நம் இனம் வாழ்ந்த கீர்த்தியையும் இற்றை நாளில் நாம் வீழ்ந்து கிடக்கும் அடிமை நிலையையும் — இந்நிலையகற்றி தமிழ்த்தாயை அரியணையிலேற்றிட நாம் ஆற்றிடவேண்டியபெரும்பணி குறித்தும் சிந்தித்திடவும் இந்நாள் பயன்படவேண்டும். இப்படிச் சிந்தித்திடின் நம் உள்ளங்களில் வீர உணர்வு பரவும்; விடுதலை வேட்கை பற்றி யெரிந்திடும்!

• நம் இனத்தைப்பற்றி, இன்பத் தமிழைப் பற்றி, தமிழன்னையின் கரங்களில் பூட்டப்பட்டிருக்கும் அடிமை விலங்குபற்றி, அந்த அடிமை விலங்கை அறுத்தெறிந்து விடுதலை பெற்றிட நாம் ஆற்றிட வேண்டிய பணியின் முறை வகைபற்றி சிந்தித்திடாமல் திருநாள் கொண்டாடி வெறுமனே விருந்துண்டு மகிழ்ந்துதான் என்ன பயன்? வெறுமனே விருந்துண்டு வயிறு நிரப்புவதுதான் 'விழா' என்றால் விலங்குகளுக்கும் நமக்கும் வேறுபாடுதான் என்ன? எனவே பொங்கல் விழா புரட்சிக் கருத்துக்களுக்கு வித்திடவேண்டும்!

அற்றை நாளில் நாம் எத்துணை புகழுடன் வாழ்ந்திருந்தோம்; நமக்கென்றோர் கொற்றம் 400 ஆண்டுகட்கு முன்புவரை இருந்தது; அந்தக் கொற்றத்தின் கொலுமண்டபத்திலே கோலத் தமிழ் குடிகொண்டு, கோலோச்சியது; பாவலரும், நாவலரும் பைந்தமிழைப்பாடி காவலரிடம் பரிசில்பெற்றுச் சென்றனர்; பாணனும், விறலியரும் பண்ணிசைத்து மகிழ்வூட்டினர். ஆடலும் பாடலும் சதங்கையும் கிண்கிணி யோசையும் எங்கும் நிறைந்திருந்தது — சீனரும், யவனரும், சிங்களரும், வங்காளியரும், எகிப்தியரும் இன்னும் பலரும் தமிழனுக்கு கப்பம் செலுத்தி வாழ்ந்தனர். தமிழினம் நாகரீகத்தின் உச்சியில் அன்று வாழ்ந்தது!

தமிழர் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பிரித்தனர்; காற்றை, தென்றல், கொண்டை, கோடை, வாடையென நான்காகப்பிரித்தனர்; மொழியை இயல், இசை, கூத்து என மூன்றாகப் பகுத்தனர்; வாழ்வை, அகம், புறம் என இரண்டாக வகுத்தனர்; இசைக் கருவிகளை தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவியென மூன்றாகப் பிரித்தனர்; ஆனால் ஒழுக்கத்தையோ ஒன்றாகவே வைத்தனர், தமிழர் இப்படி வாழ்க்கை நெறிமுறை வகுத்து — செழிப்புடன் வாழ்ந்த நேரத்திலே, பாரிலே மற்றையோர் மந்தைகளாக வாழ்ந்தனராம்; மொழி

## அரசியல் மடல்

வளமே கிடையாதாம்; மிலேச்சர்களாக — திருந்தாத பண்பாடற்ற கூட்டமாக இருந்தனராம்!

ஆம் நண்பா, நம்முடைய தமிழ்க்கொடி இமயத்தை முட்டி வெற்றிகொண்டு அதற்கு அப்பாலும் சென்றது — தமிழ் நாடு வீரத்திலும் சரி, கல்வியிலும் சரி. செல்வத்திலும் சரி தனக்கு இணையின்றி தலைநிமிர்ந்து வாழ்ந்திருந்தது! கடலிலே நம் கலமாம், கத்தும் கடலை அடக்கினார்களாம் நம் மூன்னோர்; உலகிலேயே சிறந்த கடற்படை நம்மிடமே இருந்ததாம். முத்தும் பவளமும் அகிலும் தேக்கும் மற்றும் வாசனைத்திரவியங்களும் நம் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியாயினவாம்வேற்று நாடுகளுக்கு! எகிப்திய எழிலரசி கிளியோபாத்ரா, தமிழ்நாட்டு முத்துக்களை மதுவில் போட்டுக் குடித்தாளாம்! இதையெல்லாம் கேட்க எத்துணை இன்பம் ஏற்படுகிறது நமக்கு!

அகமும், புறமும், தெய்வத் திருக்குறளும், தொல்காப்பியமும் சிலம்பும், மேகலையும், பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும், கலிங்கத்துப்பரணியும் பதினெண்கீழ்க்கணக்கும் எடுத்துரைக்கும் பழந்தமிழ் நாட்டுக் காட்சிகளை கண்டிடும்போது பெருமை ஒரு புறமும் பெருமூச்சு மறுபுறமுமன்றோ ஏற்படுகிறது நமக்கு! 'தமிழ்நாடு' என்று குறிப்பிடும்போது — இப்போது 'தமிழ்நாடு' என்று அழைக்கப்படுகின்ற இந்திய உபகண்டத்தின் ஒரு மாநிலத்தையல்ல — நம் ஈழத்தையும் சேர்த்தே "தமிழ்நாடு" என குறிப்பிடுகிறேன். நம் ஈழநாடும் தமிழ்நாடுதான் என்பதை வரலாற்றாசிரியர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றனர்!

• ''புத்த மதத்தின் மூலம் வடநாட்டுப் பண்பாடு புகுந்து சிங்கள மொழி வேறுபடுவதற்கு முன்னிருந்தே, இலங்கை தமிழகமாயிருந்தது. சிங்களம் வேறுபட்ட பின்னும், வட கீழ் இலங்கை தமிழ் நாட்டைவிட தொன்மைமிக்க தமிழகமாகவே இருந்து வருகிறது. ஈழநாட்டாராகிய இலங்கைத் தமிழர் தமிழ்நாட்டிலிருந்து குடிபுகுந்தவருமல்லர்; தமிழ் நாட்டுத் தமிழர் ஈழநாட்டிலிருந்து குடியேறியவருமல்லர்; ஈழநாட்டுத் தமிழர் சிங்களவரினும் பழமையான இலங்கை நாட்டு மக்களே''

— என்று குறிப்பிடுகின்றார் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை தமது 'வளரும் தமிழ்' எனும் நூலிலே! எனவே இலங்கையும் ஆதித் தமிழ் நாடே என்பதை நம்மை வந்தேறுகுடி என அழைத்திடும் வந்தேறு குடிகள் புரிந்து கொண்டிடவேண்டும்!

இமயத்தில் புலிக்கொடி [illegible] புகழ்பெற்ற
[illegible] இலங்கையைப் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது புலிக்கொடியை ஈழத்தில் பறக்கவிட்டதும், இங்கிருந்து பன்னீராயிரம் சிங்களரைச் சிறைசெய்து கொண்டுசென்று காவிரிக்கு கல்லணை கட்டிய கதையையும் — பராந்தக சோழன் இலங்கைமீது படையெடுத்து சிங்களச் சேனையை வெற்றிகொண்டு 'சிங்களாந்தகன்" எனும் சிறப்புப் பெயர் கொண்டதும், இராச இராச சோழனும், இராசேந்திர சோழனும் இலங்கையை வெற்றிகொண்டு பொலனறுவையில் சிவாலயம் கட்டுவித்ததும் வம்புக்கதைகளல்ல — வரலாறு பேசுகின்ற உண்மைகள்! இத்தகைய வரலாற்றுச் சிறப்பைப் பெற்றிருந்தது தமிழினம் அன்று!

தமிழ் நாட்டின் வளம் எத்துணை செழிப்புடனிருந்தது என்பதனை பரணிபாடிய செயங்கொண்டார் கூறுகிறார் கேளேன்.

''எங்குமுள மென்கதலி
எங்கும் உள தண்கமுதம்
எங்கும் உள பொங்கும் இளநீர்

எங்கும் உள பைங்குமிழ்கள்
எங்கும் உள செங்குமுதம்
எங்கும் உள செங்கயல்களே...''

முதலாம் குலோத்துங்கனைக் காணவருகின்றார்களாம் எழில் மகளிர் — அப்பெண்களிடமிருந்த அத்தனை வளமும் சோழநாட்டில் இருப்பதாகசுவையுடன் கூறுகிறார் கவிஞர்! தொடைகளுக்கு வாழைகளையும், கழுத்துக்கு பாக்கு மரத்தையும், மார்பகத்துக்கு இளநீரையும் மூக்குக்கு குமிழம் பூவையும் உதடுகளுக்கு செவ்வாம்பல் மலரையும் கண்களுக்கு கெண்டை மீனையும உவமையாக்கி சோழநாட்டின் வளம் காட்டுகிறார் கவிஞர்!

இதே போல, இன்று நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழ் நாட்டின் புரட்சிக்கவி காசி. ஆனந்தன் தமிழக வளம் காட்டுகிறார் பார்!

வேரோடு பலாக்கனி தொங்கும் ஆங்கு
வெள்ளாடு பழத்தின் மேல் மூதுகு
தேய்க்கும்!
நீரோடை வெள்ளத்தில் மீனையுண்டு
நெஞ்சத்தால் வெறி கொண்ட
கொக்கினங்கள்
கூரான வாய்கொண்டு மரத்தின்
கொம்பில்
கூட்டுத் தேனுடைத்தலும் தேனிறு
பாரெல்லாம் பெருக்கெடுத்தோடும்...''

என்று பாடுகிறார் தமது 'தமிழன் கனவிலே' இப்படித் தமிழ் கவிஞர்கள் காட்டும் தமிழக வளத்தைப்பற்றி எடுத்துரைத்திடப் புகின் அது முடிந்திடக்கூடியதல்ல — ஓய்வு கிடைத்திடும் போது பழைய இலக்கியங்களை எடுத்து நீயே படி! சுவையும் பயனும் கிடைத்திடும்!! விடுதலை உணர்வும் அதிகரித்திடும்!!!

நண்பா, மேலை நாட்டினர் இதழுக்கும் நகங்களுக்கும் செவ்வண்ணம் பூசுவதையும் முகத்துக்கு சாயம் பூசுவதையும், தங்களை விதவிதமாக அழகுபடுத்துவதையும் கண்டு, அதுபோல, நற்றமிழ் நங்கையரும் இன்று தம்மை அலங்கரித்திட முனைகின்றனர்! அதனை ஏதோ மேனாட்டு புதுமை நாகரீகம் என்று அவர்கள் எண்ணுகின்றனர் போலும்! ஆயின் பண்டைத் தமிழ் நாட்டிலிருந்த ஒப்பனை முறையே மேல் நாடுகளுக்கு பரவின என்பதை இவர்கள் அறியார்! சிலப்பதிகாரத்தில் "வேத்தியல், பொதுவியல் ... என்று தொடங்கிக் கூறப்படும் இருபத்தாறு கலைகளில் ஏழுவிதமான ஒப்பனைக்கலைகள் கூறப்பட்டுள்ளன.

வட்டிகைச் செய்தி (சாந்து அணிதல்)
கோலங்கோடல்
பாயற்பள்ளி (படுக்கையறை அழகு)
சுந்தரச் சுண்ணம் (Face Powder)
(Body Powder)
தூநீராடல்
மலர் ஆய்ந்து தொடுத்தல்.

இப்படி பண்டைத் தமிழ் மகளிர் ஒப்பனைகளைபற்றி சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிறது — கண்ணுக்கு மையிடுதல், சந்தனம், குங்குமம் இரண்டினாலும் 'தொய்யில்' என்ற சித்திரம் வரைதல், கைகளுக்கும் கால்களுக்கும் மட்டுமன்றி உதட்டுக்கும் நாக்குக்கும் கன்னத்துக்கும் நெற்றிக்கும் கைநகங்களுக்கும் அயத்தகம் அல்லது செம்பஞ்சுக் குழம்பால் சாயம் இட்டுதல், நறு நெய்க் குளிப்பு, பலவகை நறு நீர்க்குளிப்பு முகத்துக்கு வண்ண நறுந்துகளிடல், பெண்டிர் கூந்தலுலர்த்த அகிற் புகையிடல் ஆகியவை தமிழர் ஒப்பனைத் திறத்தின் பகுதிகளே என்கிறார் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார்!

நறுநீரில் தமிழர் ஆடவரும் பெண்டிரும் மூன்று தடவை குளித்தனராம்; மூன்று தடவையும் மூன்று வகைப்பொடி கலந்த நீரில் ஆடினராம்; முதல் பொடியில் துவர்ம்

( 11-ம் பக்கம் பார்க்க )

# யாழ்ப்பாணத்தின் பண்டைக்கால வணிகம்

யாழ்ப்பாணம் மிகவும் பழங்காலத்திலேயே பிற நாடுகளுடன் வணிகம் செய்தது. எகிப்து, கிரேக்கம், உரோமம், வட இந்தியா, தென் இந்தியா ஆகிய நாடுகளுடனும் சிங்கள அரசுகளுடனும் வியாபாரத் தொடர்பை அமைத்துக் கொண்டது.

அக்காலத்தில் மிகவும் மதிப்புள்ள பொருட்களாக பஞ்சு, முத்து, தந்தம், எள்ளு என்பன இருந்தன. அவைகளை யாழ்ப்பாணம் பொன்னுக்கும், செம்புக்கும் இரும்பிக்கும், சவத்திற்கும் விற்றது. ஆதலால் மிகவும் பழங்காலத்திலேயே பண்டமாற்று முறை அகன்று நாணய முறை நிலவியது.

வணிகமே யாழ்ப்பாண இராட்சியத்தை வளர்த்தது. யாழ்ப்பாண உள்நாட்டு வர்த்தகத்திற்கு பெருந்தொகையான சந்தைகள் மையமாக அமைந்திருந்தன. இச்சந்தைகள் கோவில்களுக்கு அருகாமையில் நிறுவப்பட்டன. கோவிலின் திருவிழாக் காலத்திலும் மற்றைய காலத்தில் கிழமையில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் மட்டுமே இச்சந்தைகள் நடைபெற்றன. இவை அரசாங்க அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. பண்டங்களை நிறுப்பதற்கும் அளப்பதற்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் இருந்தனர். அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தரகர்களும் குத்தகைக்காரர்களும் வியாபாரத்தில் ஈடுபட்டனர் பொதிகள் சுமப்போரும், விலை கூறுபவரும் எல்லாச் சந்தைகளிலும் காணப்பட்டனர்.

## சந்தை

வாங்குவோர் அனுமதிக்கப்பட்ட விற்பனையாளரிடமிருந்தே பண்டங்களைப் பெறவேண்டியதாயிற்று: தனிப்பட்ட முறையில் விற்பனை இருக்கவில்லை. பண்டங்கள் யாவும் சந்தையில் மட்டுமே விற்க வேண்டியதாயிற்று. நிறைகோல்கள், படி, அளவைகள் சந்தையில் இருந்த அரசாங்க உத்தியோகத்தரால் வழங்கப்பட்டன; சந்தையில் நடந்த சகல நடவடிக்கைகளும் மேற்பார்வை செய்யப்பட்டதுமன்றி அவைகள் சந்தையை மேற்பார்வை செய்த அரசாங்க உத்தியோகத்தரால் பதிவும் செய்யப்பட்டன:

உணவு சந்தையில் விற்கப்பட்ட பண்டங்களில் மிகவும் முக்கியமானதாக இருந்தது. சந்தையில் புலங்களில் இருந்து வந்த புல் அரிசியும், கேன, குணு, வத்தை! ஆள்தைகளில் இருந்து வந்த வரகும், கேள், கேப்பை, ஆள்தைகளில் உண்டான குரக்கனும் சாமி, மொண்டை, தினை அல்லது ஏனல், கடலை, பயறு! நிந்தை, கூழம், திலம் திலகம் எனப்பட்ட எள்ளும் சந்தையில் வந்து குவிந்தன. மேலும் வெங்காயம் (நிச்சயம்) மிளகாய், பூசனி, கிரை வெள்ளரி, வெக்கரி, முருங்கை (கிழவி) போன்ற காய்கறிகள் சந்தையில் காணப்பட்டன. மரவெள்ளி, (ஆள்வள்ளி, ஏழிலை) வத்தாளை, இராசவெள்ளி, பனை ஒடியலும் விற்கப்பட்டன. அயதுடன் மஞ்சள், இஞ்சி, வெற்றிலை (மெல்லிலை, பன்னம்) முதலியனவும், பழங்களாகிய எலுமிச்சைப் பழம், தோடை, மா, (கொக்கு, மாந்தி) பலா, வாழை, (அம்பணம், ஓசை, கதலி, கவர், சேகிலி) முதலியனவும் சந்தையில் விற்கப்பட்டன; வில்வம், (கூவிளம்) இலந்தை (குல்வலி) கொய்யா போன்றவை சில சந்தைகளில் விற்கப்பட்டன. இன்று போல் அன்றும் கிராமங்கள் சில பயிர்ச்செய்கையில் மட்டுமே சிறப்புற்று இருந்தன: உதாரணமாக கேணம், குணம் என வரகு அழைக்கப்பட்டது. கேள், கேப்பை என்பது குரக்கன். ஆள்தை என்றே முற்காலத்தில் கிராமங்கள் அழைக்கப்பட்டன.

ஊத்து மரத்தில் ஊத்தப்பட்ட எண்ணெ(உடுப்பிட்டி) வட்டத்தில் (செக்கில் ஆட்டப்பட்ட எண்ணெயும் (வட்டக்கொத்தல்)-வட்டுக்கோட்டை, எண்ணெக்கொத்தில் (ஆனைக்கோட்டை) திறம் என் எண்ணை (நூவுநெய்—நுணுவில்) மாட்டு வண்டில்களில் ஏற்பப்பட்டு சந்தை சந்தையாக கொண்டு சென்று விற்கப்பட்டன: பிண்ணுக்கும் மனித உணவாக விற்கப்பட்டது:

**கே. பத்மநாதன்**

பாய், கடகம், பெட்டி முதலியவை சாயந்திட்டப்பட்ட ஓலைகள், குடைகள் சந்தையில் ஒருபக்கத்தில் அடுக்கப்பட்டிருந்தன. பனங்கட்டி, சக்கரை உமல்களில் இருந்தன.

குத்தகைக்காரரே சந்தையில் அரிசி, நெல் முதலிய தானியங்களை விற்றனர். ஒரு பணத்திற்கு தானியம் கொள்வனவு செய்தார்கள் ஒருபிடி தானியத்தை சந்தையிலிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வரியாகச் செலுத்தினர்.

## வியாபாரம்

தயிர், நெய் கோவில்களில் மட்டுமே விற்பனவு செய்யப்பட்டது. உப்பு மாட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டு கிராமங்கள் தோறும் அரசாங்க உத்தியோகத்தர்களினல் விற்கப்பட்டது.

சில ஊர்களில் அமைந்த சந்தைகள் கோழிகளை விற்றன. அன்று சேவல் சண்டை ஒரு பொழுதுபோக்காக இருந்தன. சாவக்கட்டு, சாவகச்சேரி, என்பன சேவல் சண்டைக்கு பேர் போன ஊர்களே. (சாவற்கட்டு— சேவல் சண்டை)

யாழ்ப்பாணத்தின் ஆடுகள் பெருந்தோற்றம் உள்ளனவாய் இருந்தன.

உள்நாட்டு வியாபாரத்தில் மாட்டு வண்டில்கள் அதிகமாக உபயோகிக்கப்பட்டன: கோண்டாவிலில் பழக்கப்படாத மூர்க்க மாடு (கொண்டா) விற்கும் சந்தையாக இருந்தது. இந்தியாவிலிருந்தும கண்டியிலிருந்தும் எருதுகள் கொண்டுவரப்பட்டன.

புடவை வியாபாரம் மிகவும் கட்டுப்பாட்டில் இருந்தது. பதிவு செய்யப்பட்ட நெசவாளரே புடவைகளை விற்றார்கள். அரசாங்க முத்திரையிட்ட புடவைகளே விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டன. அரசாங்க முத்திரை பெறுவதற்கு வரி செலுத்தப்பட்டது;

புகையிலை சந்தையில் மட்டுமே விற்கப்பட்டது. உற்பத்தியாளர் தமது உபயோகத்திற்கு மட்டுமே புகையிலையை தமது வீட்டில் வைத்துக்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் [illegible] என்றும் சுருட்டுத் தொழிலுக்கு பாவிக்கப்பட்டது. சுத்து மேல் இலை என்றும் அழைக்கப்பட்டது:

கள்ளு விற்பனை நிலையங்கள் கள்ளுக் குத்தகைக்காரரால் நடாத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பனம் கள்ளு நீரா என அழைக்கப்பட்டது. நீரா, வரகு வைக்கோல் அடைந்து கொழுத்தப்பட்ட முட்டிகளில் சேகரிக்கப்பட்டது.

சாராய உற்பத்தி விற்பனை குத்தகைக் காரர்கையில் இருந்தது. சாராயம் உரக்கா (Uracca) எனப்படும் முற்காலத்தில் மூங்கில் பீப்பாக்களில் ஊறிய கள் (உக்கா) சாராயம் ஆனது. யாழ்ப்பாணத்தின் சாராயம் மன்னர், திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பிற்காலத்தில் கள், கருப்பணியிலிருந்தும் சாராயம் வடிக்கப்பட்டது.

சந்தைகளில் அப்பம் விற்போரும், முறுக்கு, பாலுநட்டி, அரியதரம் விற்போரும், கடலை கச்சான் விற்போரும் காணப்பட்டனர்.

கோயிலில் கூழ்ச்சாலைகள் இருந்தன. இவைகள் கஞ்சியையும் கூழையும் உணவு தேவைப்பட்டோருக்கு இலவசமாக விநியோகித்தனர்.

தங்கள் பண்டங்களை விற்ற கிராமவாசிகள் தாங்கள் பெற்ற பணத்தைக் கொண்டு மண்ணுல், இரும்பால், மரத்தால், செம்பால் செய்த பொருட்களை வாங்கினர். அதனுல் தொழிற்துறை முன்னேற்றம் அமைந்தது. சிறப்புடைய தொழில்களாக ஆடை நெய்தல் இரும்புத் தொழில் செம்புத் தொழில் தச்சுத்தொழில் மண்பாண்டத் தொழில்கள் விளங்கின.

## கடல் வாணிபம்

கடற் கரையை அடுத்த இடங்களில் வெளிநாட்டு வியாபாரம் நடந்தது. கடல் வாணிபம் சுருதி பல்வேறு நாடுகளிலிருந்து யாழ்ப்பாணம் புகுந்த வணிகரும் இக்கடற்கரைப் பட்டினங்களில் வாழ்ந்தார்கள். இவர்கள் ஒற்றுமையாய் வாழ்ந்தார்கள். தங்கள் வழிபாட்டிற்குரிய தேவாலயங்களை தாம் தங்கியிருந்த இடங்களில் கட்டினுர்கள்.

தலைசிறந்த கடற்கரைப் பட்டினங்களாய் ஊர்காவற்றுறை, பருத்தித் துறை, வல்வெட்டித்துறை, தொண்டை மன்னர், தலைமன்னர், சம்புகொல்லம், வலிபேரம், அன்ன பூரணி கொல்லம் (கொழும்புத் துறையை—நாபூணி பட்டணம் எனப் போத்துக்கேயர் அழைத்தனர்), விளங்கின: இக்கடற்கரைப் பட்டணங்களில் வெளிநாட்டு வர்த்தகத்தின் மையமாக அமைந்த பெரும் சந்தைகள் அமைந்தன. இச்சந்தைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து பலவித பண்டங்கள் கொண்டு வரப்பட்டன. கடற்கரை அடுத்த பண்டகசாலைகளில் அவைகள் குவிக்கப்பட்டிருந்தன. இச்சந்தைகள் பல நாட்கள் நடந்தன. இவை பிரபல்யம் அடைந்தவையாய் இருந்தன;

இச்சந்தைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தனிப்பட்ட பொருளே பிரதானமாக விற்பனை செய்யப்பட்டது. வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட பொருட்கள் பொதிகள் கட்டப்பட்டு அரசாங்க முத்திரை இடப்பட்டன.

வலிபேரம் கடற் கரையை அடுத்த சந்தை தோல் பொருட்களை ஏற்றுமதி செய்தது. தோல்பொருட்களை வாங்குவதற்கு இங்கு அராபியர் வந்தனர்.

ஊர்காவற்றுறை யானைகளையும், பருத்தித்துறை பருத்தியையும் வல்வெட்டித்துறை வல்வெட்டாவையும் ஏற்றுமதி செய்தன; வல்வெட்டித்துறையில் கப்பல் கட்டும் தொழிலும் நடந்தது. பலவகையான புடவைகள், கச்சைகள் துவாலைகள், திரைச்சேலைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவற்றில் சில நிறம் திட்டப்பட்டவை, சில நிறம் திட்டப்படாதவை. சில அலங்கரிக்கப்பட்டவை. ஏற்றுமதி செய்யப்பட்ட புடவைகள் மீது அரசாங்க முத்திரை இடப்பட்டது. சாயவேர் முக்கிய ஏற்றுமதியாய் இருந்தது. யானைகள், குதிரைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன; ஒல்லாந்தர் காலத்திலும் யாழ்ப்பாணத்தில் காட்டுக் குதிரைகள் பிடிக்கப்பட்டன.

எள்ளு இலங்கையின் இயற்கைப் பயிர் இங்கிருந்தே அது இந்தியாவுக்குப் பரவியது;

பதப்படுத்தப்பட்ட கருவாடு தலைமன்னர்த் துறையால் ஏற்றுமதி செய்யப்பட்டது.

## யாழ்ப்பாணத்தின் முக்கியத்துவம்

ஆதிகாலம் தொடக்கம் முத்து வியாபாரம் பரவர் கையில் இருந்தது. சிலாபத்தில் முத்து ஏலத்தில் வெளிநாட்டவர்க்கு விற்கப்பட்டது. சிலவேளைகளில் முத்து தென்னிந்தியப் பட்டணங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே ஏலத்தில் விற்பனையானது.

அத்திவேர், கொட்டை, தயிர், பனங்கட்டி, முதலியன அன்னபூரணி கொல்லத்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து வந்து இறங்கிய பொருட்களும் கடற்கரை அருகாமையில் உள்ள அரசாங்கப் பண்டகசாலைகளில் வைக்கப்பட்டன. அப்பொருட்களின் அளவும், நிறையும் அளந்து அவற்றிற்கு சுங்கம் கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் அரசாங்க முத்திரைகளை இட்டனர். இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் நெல்லு, கண்ணடிப்பொருட்கள், பொன், வெள்ளி, இரும்பு, மணிகள் செய்வதற்கேற்ற உற்பத்திப் பொருட்களாகும். அன்றியும் ஆடம்பர பண்டங்களும் இறக்குமதிசெய்யப்பட்டன. பல வரிசைகளாக பிணிக்கப்பட்ட சின்னஞ்சிறு படகுகளில் (சுண்டன் வள்ளம்) நெல்லு சுண்டிக்குளிக்கு அடுத்த கடற்கரையில் அமைந்த அரசன் பட்டயத்தில் இறக்குமதி செய்யப்பட்டது.

மணிகள், பொன், வெள்ளி இரும்பு குவிக்கப்பட்டு விற்கப்பட்டன. சம்புநாதம்என்ற மாற்றுக் குறையாத பொன் இறக்குமதி செய்யப்பட்ட துறையே சம்புக்கொல்லமாகும். கடலில் வழியைக் காட்டுவதற்காக தொல் வேரம், வலிவேரத்தில் கலங்கரை விளக்குகள் இருந்தன. (வேரம்—கோபுரம்)

தலைமன்னர் துறையினுல் பட்டுப் புடவைகள் இறக்குமதி செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்தின் கரை ஆழமற்றது. கப்பல்கள் நங்கூரம் இட வசதியாகவும் புயல் காற்றினுல் பாதிக்கப்படாத நிலையிலும் யாழ்ப்பாணத் துறைகள் அமைந்திருந்தன. யாழ்ப்பாணம் தனக்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்ததும் அல்லாமல் வெளிநாட்டுப் பண்டங்களை இறக்குமதி செய்து பின்பு வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்தது. கிழக்கு நாடுகளுக்கும் மேற் நாடுகளுக்கும் ஆறும் நூற்றுண்டளவில் யாழ்ப்பாணம் மையமாக இருந்தது.

(8ம் பக்கம் பார்க்க)

## மங்கையே பொங்கு!

தை மங்கையே! எங்கள்
  தமிழ் மங்கையே! பொங்கு
வையந்தனை ஆளும் சில
  மாற்ருர் நம்மவரில்
கையாள் என வைத்து தமிழ்
  கன்னி புகழ் பழித்து
செய்யாதன செய்தார் அவர்
  செயல் கண்டுமே பொங்கு!

எங்கள் தமிழ்ப் பாவாய்! புது
  எழிலாய் இன நகையாய்!
எங்கள் தமிழ் தன்னை இங்கு
  எதுவும் புரியாதோர்
தங்கள் உயர்வுக்காய் ஒரு
  தரம் அற்றிடு மொழியாய்!
பங்கம் செயும் கெடுவார் கெட
  பாவாய்! உளம் பொங்கு!

மலர் சூடிய பாவாய்! தமிழ்
  மக்கள் தமைக் காவாய்!
நிலம் தோன்றிய காலமுதல்
  நிலவும் தமிழ்த்தாயின்
குலம் தன்னையே அழிக்கும் சில
  கொடியோர் செயல்கண்டு
அலை எற்றிடு கடல் என்ன உன்
அகம் நொந்துமே பொங்கு!

மா. சோமலிங்கம்
செங்கலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுத்ததற்கெல்லாம் அறுவையா?



ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு கவிஞன் இருந்தான்: அவன் மனித சக்தியின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன்; அதன் நன்னோக்கிலே எள்ளின் முனையளவு அய்யப்பாடும் கொள்ளாதவன்; மானுடம் ஒரு குலமாக உருவாகி நிற்கப்போகிற எதிர்காலத்தை இப்போதே கண்டு மகிழ்ச்சி கொள்ளுகிறவன்...

நடக்குது பாரந்த
  நாகரிகம்—அதில்
நகைக்குது பார் ஒரு
  வேகவிதம்!
கிடக்குது பாரெங்கும்
  நகைமுகமே—எங்கும்
கிடைத்திட வேயில்லை
  பகைமுகமே!

இப்படி அந்த எதிர்கால உலகைக் கண்டு களிபேருவகை கொள்கிறான் அவன்; அந்த எதிர்கால உலகின் மக்கள் இயக்கத்தைக் காணும்போது அவனுடைய உள்ளம் நிலைகொள்ளவில்லை.

கோடி உடம்பு கொண்டு
  ஓர் உடலோ—பல
கோடி நெஞ்சங்களில்
  ஓர் நினைவோ?
பாடி அடங்குவதோ
  இதுவே?—பொது
மானுடம் பூத்ததுவே
  மெதுவே...!

சொற்களிலே அந்தக் காட்சியை இப்படிச் சிறைசெய்து பார்த்து மகிழ்கிறான். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற குரலுக்கு இக்காலத்தார் ஊட்டிப் பார்க்கிற விரிந்த பொருள் வெறும் கனவு அல்ல:—"எல்லார்க்கும் எல்லாம் என்று இருக்கின்ற இடம் நோக்கி நடக்கின்றது இந்தவையம்" என்பது அடைய முடியாத இலட்சியமல்ல;—அந்த விரியத்திசையிலே உலகம் நடைதொடங்கிவிட்டது." இப்படி எண்ணி உவகை பூக்கிறான் அந்தக் கவி மகன்.

## முன்பார்த்து, பின்பார்த்து:

உயரமானவன் பார்ப்பதைக் குள்ளமானவன் பார்க்க முடிவதில்லை; இளைய காதில் தெளிவாகக் கேட்பது கிழடு தட்டிய காதில் மந்தமாகக் கூடக் கேட்பதில்லை; வயிரம் பாய்ந்த நெஞ்சிலே கிளர்ந்து எழும் சிந்தனைகள் கோழைகளின் நெஞ்சில் தலை எடுப்பதே இல்லை!

இருபதாம் நூற்றாண்டிலே ஏறி நின்று, இந்தப் பக்கம் ஆயிரம் ஆண்டுகளையும் அந்தப் பக்கம் ஆயிரம் ஆண்டுகளையும் பார்க்கிறான் கவிஞன். கடந்து போன ஆயிரத்தில் முளைத்திராத பல பயிர்கள், —தோன்றியிராத பல சுடர்கள்,—இதோ முகம் காட்டியுள்ளதை அவன் காண்கிறான்; துறைதோறும் துறைதோறும் புதுமைகளாகவும், வளமைகளாகவும் நிமிர்ந்துள்ள முகங்கள், அடுத்து வரும் ஆயிரம் ஆண்டுகளில் இங்கே பொழியப் போகும் அறிவையும் ஆற்றலையும் தன் மனக்கண்ணால் அவன் காண்கிறான். அந்தக் காட்சியே, எதிர்கால உலகத்தை இன்ப ஒருமைப் பொதுநல மானுடமாக அவன் நெஞ்சிலே கொண்டு வந்து நிறுத்துகிறது...

## தருமக் கொலைகள்

இருபக்கமும் பார்வையைச் செலுத்தி அங்கங்கே உள்ள நலப்பயிர்களைக் காணும் அவன் இடையிடையே தத்திக் குதிக்கும் வெட்டுக் கிளிகளையும் காணாமலில்லை; அவைகளின் சேட்டை சிலகாலம் வரை செல்லுபடியாகும் என்பதையும் அவன் உணராமலில்லை: ஆயினும், 'இதுவரை அடித்த மருந்திலேயே செத்தொழியப் போகின்றவை அவை; தெளிக்கப்பட்டுள்ள அறிவென்னும் மருந்து அவைகளின் உடம்பில் கொஞ்சம் மெதுவாகவேலை செய்கிறது; இப்படி எண்ணுகிறான் அவன். அதனாலேதான்,—'இனிமேல் ஒன்று சேர்க்கும் ஆக்க முயற்சிகளிலேயே ஈடுபடுவோம்; —பிரித்துப் பிரித்து வைக்கும் வேலையைக் கைவிடுவோம்; யாரோ சிலரின் பிரிவினை வெறியைப் பெரிதுபடுத்த வேண்டாம்' என்கிறான் அவன்.

---

டாக்டர்
சாலை — இளந்திரையன்

---

வெட்டிப் பிரிக்கின்ற
  வேதனைக் கத்தியை
வீசி வெறுத்து விட்டோம்—சில
  வேளை அறுவைக்கு
மட்டும் சிறுகத்தி
  வேண்டி ஒதுக்கி வைத்தோம்!

'உலகின் புதுநடையால் அதன் உடம்பிலே புதிய நோய்கள் தோன்ற இடமில்லை; தோன்றினாலும், அந்த உடலிலே ஊறும் ஆற்றலே அதை ஒழித்துவிடும்! —அதை நீக்க அறுவைச் சிகிச்சை தேவைப்படாது' என்று அவன் நம்புகிறான்.

பின்னே ஏன், 'சில வேளை அறுவைக்கு மட்டும் சிறுகத்தி வேண்டி ஒதுக்கி வைத்தோம்' என்று பாடினான் என்கிறீர்களோ? உண்மையில், இனிமேலும் கத்தி தேவை என்று நினைக்கவில்லை: பல்லாயிரம் ஆண்டுகளாகக் கத்தியுடனேயே பழகியுள்ள மக்களிடம், எடுத்த எடுப்பிலேயே, 'கத்தியைக் கீழே போடுங்கள்!' என்று சொன்னால் அவர்கள் மிரள்வார்களே என்று நினைத்தே 'சிறுகத்தி இருக்கட்டும்' என்று சொல்லி வைத்தான்:

இதுவரை வந்த வரலாறு அவனுக்குத் தெரியாமலில்லை; அண்மைச் சில ஆண்டுகள் உலகநடைக்குப் புதியபாதை அமைத்திருந்தாலும்,— "உரிமைப்பறிப்பு, அதை மீட்கப் போராட்டம், கொலை" என்ற முறையில் வந்துகொண்டிருந்த உலக வரலாற்றை அவன் மறந்துவிடவில்லை.

அறம் உரைக்கும் கதைகளிலும்
  அந்தத்தில் பார்த்தால்
அடிதடியின் முடிவில்தான்
  அறம்வெல்லக் கண்டோம்!

தருமக் கடவுளின் மகனென்ற பட்டயத்தோடு உலவிய தருமபுத்திரனோ, காத்தற்கடவுளின் அவதாரம் என்ற முத்திரை பெற்ற சக்கரவர்த்தித் திருமகனோ இரத்தம் சிந்தாமல், உயிர்க்கொலை புரியாமல் தருமத்தை நிலைநாட்டியதாக நாம் கேள்விப்பட்டதில்லை. கத்தி முனையிலே "தருமம் காப்பாற்றப்பட்ட" அந்தக் கதைகளைத் தான் இன்றைக்கும் புலவர், இதோ, சுவைசொட்டச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கதைகளைக் கேட்டுக் கேட்டே வளரும் பரம்பரைதான் இந்த மண் உருண்டையில் பிறந்து பிறந்து செத்துக்கொண்டிருக்கிறது. எனவே, இந்த மானுடத்துக்கு நோய் வராது என்றோ வரும் நோய் அறுவை இல்லாமலே தீரும் என்றோ நினைப்பதற்கு இடமில்லைதான்: ஆனாலும்,

கவிஞன் கண்ட காட்சி வேறு! கடவுள்கள் மனித மக்களைப் பெறாத காலம் இது; தெய்வங்கள் தங்கள் அவதாரத் திருவிளையாடலை நிறுத்திக் கொண்ட காலம் இது; மூட நம்பிக்கை இருட்டைக் கிழித்துக்கொண்டு அறிவுச் சுடர் எழுந்து விட்ட காலம் இது. ஆதலால், — விட்ட குறை தொட்ட குறையான மூடத்தனங்களும் அவைகளால் பேணி வளர்க்கப்படும் வெறிகளும் முழுவதும் வற்றி விடா விட்டாலும், —அவைகளை அமுக்கிவிட்டு, அறிவுப் புனல்பொங்கிப்பெருகிவிடும் என்று கவிஞன் எதிர்பார்க்கிறான்.

## அறுவையே வழி?

ஆனாலும், அண்மைக்கால நிகழ்ச்சிகளைக் கவனிக்கையில், அந்தச் சிறிய கத்திக்கு ஓயாத வேலை இருந்து வருவதையே காண முடிகிறது; இன்னமும் அந்த வேலை தொடர்ந்து இருக்கும் போலவும் நினைக்க வேண்டியுள்ளது.

பணக்கார அமெரிக்கா, தன் மக்களை எங்கோ உள்ள வியட்நாமில் கொண்டு போய்க்காவு கொடுக்கிறது; மதக்காரப் பாகிஸ்தான், தன் மண்ணிலேயே தன் மக்களை உயிர் வேறு உடம்பு வேறாகக் கழற்றியது; இலங்கை நாடு, தன் மக்களில் ஒரு பகுதியினரின் உரிமைகளைச் சிறிது சிறிதாக உறிஞ்சி அவர்களை மனிதச் சக்கைகளாக்கும் தடத்தில் நடக்கிறது. அங்கங்கே வெடிக்கும் இந்த வெப்புக் கட்டிகளால் மானுடச் சமுதாயம் தாங்க முடியாத வேதனை அடையும்போது, அமைதிக் குரலை நிறுத்திவிட்டு அறுவைக் கத்தியைத் தான் கையில் எடுக்க வேண்டியுள்ளது: அறுவை இல்லாமல் நோய் தீர்ந்து விடும்" என்ற நம்பிக்கையை (உலகப்பிறர்) அந்த மக்களுக்கு ஊட்ட முடியாதபோது, வேறு என்னதான் வழி?

## பரவாத ஒளி

கவிஞன் வெற்றுக் கனவு காணவில்லை; அவன் யாருக்கும் எதற்கும் அஞ்சிப் பொய் யாசையை உண்டாக்கவுமில்லை. அவனுடைய மதிப்பீடு சரியான மதிப்பீடே! அறிவியல், தொழிலியல், வாணியில், கலையியல் என்பவைகளின் புதிய வளர்ச்சியால், மனித இதயங்கள் ஒன்றுக்கொன்று மிக அருகில் வந்துவிட்டன; அவை ஒன்றாக இணைந்து விடப்போவது உறுதியே.

ஆனால், உலகத்திலே வளர்ந்துள்ள இத்தனை அறிவும் அங்கே விரிந்துள்ள புதுப்பெரிய வெளிச்சமும், இன்னும் நமது தெருக்களிலும், வீடுகளிலும் போதிய அளவு பரவவில்லை. முக்கியமாக, நமது கல்வியிலும் சமுதாய வாழ்விலும் இவை இன்னும் போதிய அளவு ஊடுருவவில்லை.

அவை இங்கெல்லாம் ஊடுருவியிருந்தால் — சந்திரனுக்கும் மண்ணுலகுக்கும் பாலம் அமைக்கப்படுகிற காலத்தில், ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையிலே இருப்பதாக நாம் கற்பித்துக் கொண்ட எல்லைக் கோட்டை இவ்வளவு கறுப்பாக கீறுவோமா? செத்துக் கொண்டேயிருக்கிற சாதியையும் மதத்தையும் கூட, ஒரு நாட்டின் பண்பாடு என்ற பெயரில் பேணிக் காப்பாற்ற முனையுவோமா?

## யாரோ, வள்ளுவராம்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே (1200 ஆண்டுகளுக்கு முன்னே?...) திருவள்ளுவர் என்று ஒருவர் இருந்தாராம்; அவர் திருக்குறள் என்று ஒரு புத்தகம் எழுதினாராம். அதிலே பகைமாட்சி என்று ஓர் அதிகாரமாம்; அந்த அதிகாரத்தில், "கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற, அடுத்திருந்து மாணாத செய்வான் பகை" என்று ஒருபாடலாம். இந்தப் பாடலுக்கு எத்தனையோ பேர் உரை எழுதி விட்டார்கள்; இந்தச் சாமியாருக்குச் சிலையும் வைத்தாகி விட்டது. எங்கோ, அவருடைய குறள்கள் வசுவிகளிலேகூட எழுதித் தொங்கவிடப்பட்டுள்ளனவாம்; என்ன பயன்? அந்தப் பாடலின் பொருள் தெருவில் நிற்போருக்கும் தெரியவில்லை; ஆட்சிமேடையில் வீற்றிருப்போருக்கும் விளங்கவில்லை: விளங்கியிருந்தால், அண்டை அயலில் ஏற்படும் சிறியகட்டிகளை, அறுவைச் சிகிச்சை தேவைப்படும் அளவுக்கு வளர விடமாட்டார்கள்:

இந்தக் குறட்பாவுக்குக் கவிஞன் பொருள்சொல்லுகிறான்; 'அண்டை நாட்டு அரசன் (அரசு) தன் மக்களுக்குக்கொடுமைசெய்து வந்தால், இந்த நாட்டுக்காரன் அவனைத் தட்டிக் கேட்க வேண்டும்:-அதனால் அவனுக்கும் தனக்கும் பகைமை மூண்டால் அதை விரும்பி வரவேற்க வேண்டும்...!' நாடு பிடிக்கும் போரையோ கொள்ளையடிக்கும் போரையோ வரவேற்காத வள்ளுவப் பண்டாரம் மனிதர் துயரைத் தீர்க்கும் போரை விரும்பி மேற்கொள்ள வேண்டும் என்கிறான்.

## எல்லை மீறலோ, இது?

இந்த மனிதாபிமானக் குரல் நாட்டு எல்லை எனும் கொடிய கரங்களால் நெரிக்கப்படுகிறது: 'இது வேறு நாடு. அது வேறு நாடு; இந்த நாட்டுக்காரன் அந்த நாட்டுக்குள் எந்தக் காரணத்தை யிட்டும் (பாஸ்போர்ட் இல்லாமல்) அடி எடுத்து வைக்கவே கூடாது' என்ற மரபை வலுப்படுத்துவதால், எந்த நாட்டில் என்ன கேடு நடந்தாலும், மனிதாபிமானம் அங்கே செயல்பட்டு அதை அப்போதைக்கப்போது தீர்த்து வைக்க முடியவில்லை.

கணவன்-- மனைவி வாழ்வில் தலையிட எந்த அரசுக்கும் உரிமையில்லை; ஆனால், கணவனோ மனைவியோ மற்றவரைக் கொடுமைப்படுத்துவதாகக் குரல் எழுந்தால் அதிலே தலையிட நீதிமன்றத்துக்கு இன்றுஉரிமை வந்திருக்கிறது. இதேபோல், நாட்டு எல்லை, தேசியக் கௌரவம் என்பவைகளுக்கு இருந்து வரும் புனிதத் தன்மைகளை மீறி மக்கள் செயல்படவேண்டிய தேவை ஏற்பட்டால் — சிறுபான்மையர் என்பதாலோ பிற காரணங்களாலோ ஒரு நாட்டுக்குள்ளேயே மக்கள் கொடுமைப்படுத்தப் பட்டால்,—அண்டை நாட்டினர் தலையிட உரிமை இருக்க வேண்டும். அண்டையில் இருப்பவர்களின் செவியிலேயே எல்லைக்கு அப்பால் இருந்து எழும் அவலக்குரல் சரியாக விழுமாகையால், அவர்களுக்கு இந்த உரிமை இருக்க வேண்டும்.

• இந்த மனிதாபிமனகடமை செயல்பட முடியாதபடி எல்லைக் கோடுகள் வலுப்படுத்தப்படுவதாலே தான்,— வேலிக்குப் போட்ட முள் ஊனுக்கு வினையான கதையாக,—தேசியம் என்னும் காலாவதியான தத்துவம், இன்று கிளைத்துவளர்ந்துள்ள பொது மானிட உணர்வு பயன்பட முடியாதபடி தடுத்து நிற்கிறது! அதனாலே தான், அடியோடு விட்டெ

(11-ம் பக்கம் பார்க்க)

---

## வீரம் பொங்குது வேறு பொங்கலேன்!

— செ. குணரத்தினம் —

துன்பம் பொங்குது
  துயரம் பொங்குது
இன்பப் பொங்கலும்
  இங்கு ஏனடா!
பஞ்சம் பொங்குது
  பகைமை பொங்குது
அஞ்சிப் பொங்கலை
  ஆக்கலா மோடா!

கொடுமை பொங்குது
  குற்றம் பொங்குது
மடமை பொங்குது
  மகிழ்ச்சி ஏனடா
பட்டுப் பொங்குது
  பாவம் பொங்குது
... பொங்குது
  பொங்கலேனடா!

நல்ல பொங்கலாம்
  நம்பிக் கெட்டவெம்
உள்ளம் பொங்குது
  உதிரம் பொங்குது
கள்வர் கண்களைக்
  குத்திக் கொன்றிட
வெள்ளம் போலெங்கள்
  வீரம் பொங்குது!

வீரத் தமிழினை
  வீற்று இலங்கையில்
கோரக் கொலைசெய்யும்
  கொடியோர் உடலினை
கூறு போட்டெங்கள்
  கொடியை உயர்த்திட
வீரம் பொங்குது
  வேறு பொங்கலேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (3)

## கருணாநிதி கூறிய ஜோசியம்!



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

1967-ம் ஆண்டு தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே சனநாயகவழியில் ஓர் அமைதியான புரட்சியை நடத்திக் காட்டினர் தமிழ் மக்கள். வாளும் வேலும், துப்பாக்கிகளும் கைக்குண்டுகளும் கொண்டு ஆதிக்க பீடத்திலிருக்கும் மதோன்மத்தர்களை அரியணையிலிருந்து மக்கள் விரட்டியடித்த வீரமிக்க சம்பவங்களையெல்லாம் வேற்றுநாட்டு வரலாறுகளில் கண்டிருக்கிறோம்—இன்றும் கண்டு வருகிறோம்.

ஆனால் தமிழ் மக்களோ அன்பையே தங்கள்வழிமுறையாகக் கொண்டவர்கள். "தமிழன் என்றோர் இனமுண்டு—தனியே அவர்க்கொருகுணமுண்டு. அமிழ்தம் அவனுடை மொழியாகும்—அன்பே அவனது வழியாகும்' என்று இதனால் தான் நாமக்கல் கவிஞர் பெருமையுடன் கூறினார். இத்தகைய அன்பு வழியில் வந்த தமிழ் நாட்டு மக்கள், 1967-ம் ஆண்டுக்கு முன் தமிழ்நாட்டை ஆண்டவர்களின் அதிகாரச் செருக்கையும், ஆணவத் திமிரையும் கண்டுகுமுறிக்கிடந்தார்களே தவிர புரட்சி எதிலும் இறங்கிவிடவில்லை — சந்தர்ப்பம் வரும், அப்போது சனநாயக ரீதியில் இவர்களுக்குப் பாடம் புகட்டுவோம் என்று காத்துக் கிடந்தார்கள்; இது தமிழக மக்களின் சனநாயகப் பண்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறதன்றோ?

1967-ம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழகத்து ஆட்சி, தமிழை மறந்த ஆட்சி, தமிழைப் புறக்கணித்த ஆட்சி; தமிழகத்தின் தனியுரிமையை தட்டிக் கேட்க அஞ்சிய ஆட்சி; தமிழகத்தின் தனியுரிமையைப் பற்றிப் பேசினால் எங்கே தங்கள் பதவி பறிபோய்விடுமோ; வடக்கத்தித் தலைவர்கள் என்ன நினைப்பார்களோ என்று கோழைத்தனமாக நடுங்கிக் கொண்டிருந்த ஆட்சி; இன்பத் தமிழ் ஆட்சி புரியவேண்டிய இடத்தில் இந்தியைத் திணிக்க முயன்ற ஆட்சி; இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடிய தமிழ் மாணவர்களைச் சுட்டுக் கொன்ற ஆட்சி; இந்த ஆட்சியின்கீழ் தான் இந்தித் திணிப்பை எதிர்த்து தம்மைத் தாமே தீமூட்டி தம்முயிரைப் பலிதந்து தமிழைக் காத்திட முனைந்தனர் தியாகிகளான சின்னச்சாமி, அரங்கநாதன் போன்ற சிங்கநிகர் இளைஞர்கள்.

தமிழுணர்வு சிறிதுமற்ற—ஆதிக்கத் திமிர்பிடித்த ஆட்சியைத்தான் 1967-ம் ஆண்டுத் தேர்தலின்போது மண்கவ்வச் செய்து தமிழக வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தினர் தமிழ் நாட்டு மக்கள்! தமிழுக்குப் பெருமைசேர்த்திடவும் தமிழ்நாட்டுக்கு ஒளிசேர்த்திடவும் தமிழினத்தாரின் பண்டைய பெருமை மீண்டும் இப்பார்மிசை துலங்கிடவும் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை—நாலரைக்கோடி தமிழ் மக்களை வழிநடத்தும் சீரிய தலைமையை—பேரறிஞர் அண்ணாவிடம்- தி.மு. கழகத்திடம் ஒப்படைத்தனர் தமிழகத்து மக்கள்!

தமிழ்நாடு தமிழ் ஆட்சியை இழந்து பல்லாயிர



"கிருஷ்ணனும்

ஆண்டுகளுக்குப் பின்னர் 1967-ம் ஆண்டு தான் தமிழ் நாட்டில் மீண்டும் தமிழ் ஆட்சி—தன்மானத் தமிழர் ஆட்சி—தலையெடுத்தது. சங்க காலம் தான் தமிழக வரலாற்றின் பொற்காலம் என்றால் மீண்டும் அதே பொற்காலம் தமிழகத்தில் அண்ணாவின் ஆட்சி—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பின்னர் தான் முகிழ்த்தது என்பதை வருங்கால தமிழக வரலாறு நிச்சயமாக எடுத்துக் கூறப்போகிறது! அந்த அளவுக்குத் தமிழும், தமிழினமும் தமிழ் நாடும் தலைநிமிர்ந்து—இன்று இந்திய துணைக் கண்டத்துக்கே வழிகாட்டக்கூடிய பெருமைமிகு நிலையை அடைந்திருக்கின்றதென்றால், அதற்குமூலகாரணமாக விளங்குவது தி.மு. கழகம் தான்!

1967-க்கு முன்புவரை பேரறிஞர் அண்ணாவையும் கழகத்தையும் தூற்றிக்கொண்டிருந்தவர்கள், 1967ல் அண்ணாவின் கைக்கு அதிகாரம்வந்ததும், அண்ணாவைப் போற்றத் தொடங்கினர்! அண்ணாவுக்கு ஆளத் தெரியுமா என்று கேலிபேசியவர்கள் எல்லாம் அண்ணாவின் செங்கோலைப் புகழ்ந்து எழுதினர். ஆனால் இவை எல்லாம் உண்மையான மனமாற்றத்தால் எழுந்தவையல்ல — அதிகாரத்தில் தி.மு. கழகம் இருக்கிறதென்பதால் ஏற்பட்ட 'செயற்கை' மரியாதையே என்பதை அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள் எடுத்துக்காட்டி விட்டன.

பேரறிஞர் அண்ணா, 1969ம் ஆண்டு மறைந்ததும், அத்துடன் தி.மு. கழகம் அழிந்தொழிந்து விடும்—கழகத்தவர்கள் ஒருவருடன் ஒருவர் மோதி ஆட்சியைப் போட்டு உடைத்து விடுவார்கள்—அந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி—மீண்டும் தமிழ் நாட்டில் தமிழ் பகைவர்களின் ஆட்சியை உருவாக்கி விடலாம் என்று தமிழகத்தின் முதலாளித்துவப் பத்திரிகைகளும், பண முதலைகளும் திட்டமிட்டிருந்தன. ஏன், இங்கு கூட சிங்கள முதலாளிகளின் தமிழ்ப் பத்திரிகையான 'தினபதி' தி.மு. கழகத்துள் சிண்டு முடிந்து விடும் பாணியில் செய்திகள் வெளியிட்டதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனால், அண்ணா, கழகத்தவரிடம் ஊட்டியிருந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் முப்பெரும் மந்திரங்களும் கழகத்தைக் கட்டிக்காத்தன. கலைஞர் கருணாநிதி அவர்கள் கழகத்தலைமையை ஏற்றும் பெருந்தன்மையின் எடுத்துக் காட்டாக விளங்கும் நடமாடும் பல்கலைக்கழகமாம் நாவலர் நெடுஞ்செழியன் கழகப் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றும் கழகத்தை, அண்ணா காட்டிய பாதையில் அழைத்துச் செல்ல முடிவு செய்தது—நாக்கைத்தொங்கப்போட்ட



சகாதேவனும்"

படி காத்திருந்த ஓநாய்களுக்கு பேரிடியாகியது!

அண்ணாமறைவுடன் கழகம் கலகலத்து அழிந்தொழிந்து விடும் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தவர்கள் - கழக அரசின் தமிழ் பயிற்சிமொழிக் கொள்கையை எதிர்த்து தமிழ் நாட்டின் ஒரு பகுதி மாணவர்களை தூண்டிவிட்டார்கள். தமிழ்மாணவன் தமிழில் பயிற்சி பெறுவதை தமிழர்களில் ஒருசாராரே எதிர்க்கத் துணிந்தது உலகில் எந்த நாட்டிலுமே காணாத புதுமை.

ரஷிய இனத்தவன் ரஷிய மொழியில் படிக்கிறான்—சீன இனத்தவன் சீனமொழியில் படிக்கிறான் —ஆங்கிலேயன் ஆங்கிலத்தில் படிக்கிறான்—பிரெஞ்சுக்காரன் பிரெஞ்சில படிக்கிறான்—இங்கு சிங்களவன் சிங்களத்தில் படிக்கிறான் — ஆனால் தமிழ் நாட்டில்—தமிழ் பிறந்த நாட்டில் — தமிழனின் தாயகத்தில் தமிழ்மொழிப் போதனைக்கு எதிர்ப்பு என்ற செய்தி ஈழத்தில் வாழும் ஒவ்வொரு தமிழனையும் வெட்கித்தலை குனிய வைத்தது- மூதறிஞர் ராஜாஜி போன்றவர்களே தாய்மொழிப் பயிற்சிக்கு எதிராக அன்று கருத்துத்தெரிவித்ததைக் கண்டு நாம் மிகவும் அதிர்ச்சியடைந்திருந்தோம்—

இந்நிலையில், 1971 தொடக்கத்தில் இந்திய உபகண்டத்தின் பொதுத்தேர்தல் வந்தது. இந்திய நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடாத்த திருமதி. இந்திரா காந்தி துணிச்சலுடன் முன் வந்தது போல—தமிழ் நாடு சட்ட சபையையும் கலைத்துவிட்டு மக்களின் அனுமதியை மீண்டும் பெறுவது என்ற தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் துணிச்சலுடன் முன் வந்தார்.

'தமிழ் நாட்டில் தி.மு. கழகம் செல்வாக்கிழந்து விட்டன; இலஞ்சமும் ஊழலும், தமிழ் நாட்டில் பெருகி விட்டன; மந்திரிகளிடம் பணம் சேர்ந்து விட்டது; கழகத்தை ஆட்சி பீடத்திலிருந்து இறக்குவதற்கு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் காத்திருக்கிறார்கள் தமிழக மக்கள்; என்றெல்லாம் பிரசாரம் புரிந்து வந்த தி.மு.க. எதிர்ப்பாளர்கள், தாம் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் ஓராண்டு முன் கூட்டியே வருபோது மகிழ்ச்சியல்லவோ அடைய வேண்டும்? ஆனால் கலைஞர் கருணாநிதி பொதுத் தேர்தல் நடத்தப் போவதாக அறிவித்ததும், ஐயோ ஆபத்து—சனநாயகத்துக்கு ஆபத்து என்று அலறிப்புடைக்க ஆரம்பித்து விட்டார்கள் தி.மு.க. எதிர்ப்பணியினர்—தி.மு.க. எதிர்ப்பணியினர் என்பதை விட இவர்களை தமிழ் எதிர்ப்பாளர்கள் என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

1967ல் நடைபெற்ற தமிழகத் தேர்தலுக்கும், 1971ல் நடைபெற்ற தேர்தலுக்குமிடையே பல வித அரசியல் மாற்றங்களைக் காணக்கூடியதாக இருந்தது. 1967 தேர்தலின் போது இந்திய தேசிய காங்கிரஸ் ஒரே கட்சியாக இருந்தது—1971 தேர்தலின் போது இரண்டாகப் பிளவு பட்டு நின்றது. 1967 தேர்தலின்போது இந்தியாவின் முதுபெரும் ராஜதந்திரி என்று கருதப்படும் ராஜாஜி அவர்கள் தி. மு. கழகத்தின் பக்கத்தில் இருந்தார். பெரியார் ஈ. வெ. ராமசாமியோ, காங்கிரஸ் பக்கத்தில் இருந்தார். 1971 தேர்தலின் போது, தமிழ் நாட்டின் இந்த இருபெரும் முதுகிழவர்களும் இடசாரி வலசாரியாக மாறிக்கொண்டார்கள். ராஜாஜி தி. மு. கழகத்தின் மிகப் பெரிய எதிர்ப்பாளரானார். பெரியாரோ தி. மு. கழகத்தின் தீவிர ஆதரவாளரானார்.

ராஜாஜி, தி.மு.க. எதிர்ப்பாளராக மாறியது குறித்து கலைஞர் கருணாநிதி அன்று தேர்தலுக்கு முன் நடைபெற்ற வேலூர் மாநாட்டில் பின்வருமாறு கூறியிருந்தார்; கருணாநிதியின் கூற்று எத்துணை உண்மையென்பதை தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டின.

"பாரதப் போரில் துரியோதனாதியர்கள் தோற்கடிக்கப்பட்டு பாண்டவர் வென்ற பிறகு அவர்களைப் பார்த்து உங்களுக்கு என்ன வரம் வேண்டும்? என்று கிருஷ்ணன் கேட்டான். தருமன், வீமன், அர்ச்சுனன் ஆகியோர் ஆளுக்கொரு வரம் கேட்டார்கள். ஆனால் சகாதேவனோ "கிருஷ்ணா உன்னுடைய உண்மையான அன்பு எப்போதும் எங்கள் பக்கம் இருக்க வேண்டும்" என்று கேட்டான். உடனே கிருஷ்ணன் 'அந்த வரம் தந்தேன்' என்று கூறினான்.

"எப்போதும் கிருஷ்ணனின் அன்பு நம்மீது தானே (11-ம் பக்கம் பார்க்க)

**கோவை-மகேசன்**

---

# பொங்கல் தமிழ்

— கவிஞர் வி. கந்தவனம் —

எங்குந் தமிழ் எல்லாந் தமிழ்
என்றுந் தமிழ் வாழ்க
சங்கந் தருஞ் சான்றோர் தமிழ்
தங்கத் தமிழ் வாழ்க
தங்குந் தமிழ் தாங்குந் தமிழ்
தானைத் தமிழ் வாழ்க
பொங்குந் தமிழ் பூக்குந் தமிழ்
பொங்கல் தமிழ் வாழ்க!

அன்புத் தமிழ் அறிவுத் தமிழ்
அறஞ்செய் தமிழ் வாழ்க
என்பும் பிறர்க் கீயுந் தமிழ்
இணையில் தமிழ் வாழ்க
இன்பத் தமிழ் ஏகத் தமிழ்
இறைவன் றமிழ் வாழ்க
தன்பக் கலில் ஈர்க்குந் தனிச்
சாந்தத் தமிழ் வாழ்க!

ஊக்கந் தரு பாக்கந் தரும்
உண்மைத் தமிழ் வெல்க
நீக்குந் துயர் போக்குங் குறை
நேர்மைத் தமிழ் வெல்க
நோக்குந் தரும் வாக்குந் தரும்
நுண்மைத் தமிழ் வெல்க
காக்குந் தமிழ் காலம் முழு
தாக்குந் தமிழ் வெல்க!

அலகிற் கலை யாகித் திகழ்
ஆதித் தமிழ் வெல்க
குலமால் வரை கொடி நாட்டிய
கொற்றத் தமிழ் வெல்க
அலைமா கடல் கல மோட்டிய
ஆற்றல் தமிழ் வெல்க
உலகத் தமிழ் திலகத் தமிழ்
ஒப்பில் தமிழ் வெல்க!

பத்தித் தமிழ் பாட்டுத் தமிழ்
பணிவுத் தமிழ் போற்றி
முத்தத் தமிழ் மூலத் தமிழ்
முத்தித் தமிழ் போற்றி
சித்தித் தமிழ் செம்மைத் தமிழ்
தெய்வத் தமிழ் போற்றி
எந்திக் கிலு மறிவார் தினம்
ஏத்துந் தமிழ் போற்றி!

ஆளுந் தமிழ் அருளுந் தமிழ்
அன்னை தமிழ் போற்றி
வாழுந் தமிழ் வளருந் தமிழ்
வாழ்க்கைத் தமிழ் போற்றி
ஆழித் தமிழ் அண்டத் தமிழ்
[illegible]
ஓமெந் தமிழ் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி, மத, பேதம் கடந்து தமிழன் எடுக்கும் விழா!

## பொங்கல் விழாவின் தனிச் சிறப்பு!

பொங்கலோ பொங்கல் உழைப்புக்குத் தனி விழா—ஓரே விழா—உலக விழா—உயர்ந்த விழா தமிழர் தம் இல்லம் தோறும் இசையும் இன்பமும் தவழ்ந்து விளையாடும் தங்கத் திருநாள். தமிழ் பெரும் நெஞ்சங்களிலும் — இல்லங்களிலும் புத்தம் புதியதோர் வீறு கொண்ட இன எழுச்சியை ஊட்டி புத்தாண்டாகப் பிறக்கின்றது. இந்நாள் தமிழகத்தின் மேதினம், ஒவ்வொர் ஆண்டும் பொங்கலோ பொங்கல் என்ற முழக்கம் கேட்பதைப் போன்றுதான் இவ்வாண்டும் இம் முழக்கம் கேட்கின்றது. கடந்த பதினைந்து ஆண்டுகளாக நமது மத்தியிலே வந்து போகும் பொங்கல் போன்ற விழாக்கள் வேதனையால் தீய்ந்த தமிழ் உள்ளங்களையும்— உணர்ச்சிகளையும் கிளறி விட்டுத்தான் செல்கின்றன. கனலையும்—கரும்புகையையும் எம்நெஞ்சங்களிலெல்லாம் மூட்டி விட்ட ஆட்சியாளர்களினால் தமிழினம் சிரழிக்கப்பட்ட நிலையில் நாம் விரும்பியோ விரும்பாமலோ கொண்டாடிக் கொண்டேதான் இருக்கின்றோம்.

செந்நெல் செழிக்க சோறுடைய வடக்கு, கிழக்கு— அடிமைத்தனத்தில் அனுபவமே இல்லாத எம் பெரும் பகுதி— செல்வச்சிறப்பனைத்தும் முற்றிய தனிநிலம்— பொன்னும் மணியும் குவியும் நன்நிலம்—நீர் நிலவளத்துடன் கல்வி வளமும் கொண்ட மக்கள்—உழைப்பு வளமும்—மன வளமும் ஒருங்கே கொண்ட தமிழினம்—விலேருழவரும் சொல்லேருழவரும் பல்கிப் பெருகிய எம்மினம் சட்டத்தின் மிரட்டலால் இன்று சின்னா பின்னப் படுத்தப்பட்டிருக்கின்றது.

எனவேதான்—காதிலே குண்டலமிளிர—கையிலே வளையலசை—காலிலே சிலம்பொலிக்க—கழுத்திலே மணி விளங்கப் பவனி வந்த தமிழன்னை இரத்தக் கண்ணீர் கொட்டி நிற்கின்றாள் இன்று.

### உழைப்புக்கு விழா

இப்பொங்கல் விழா ஒரு சாதியினருக்கோ — இனத்தாருக்கோ-ஒரு நாட்டுக்கோ ஏகபோக உரிமைக் குரியதல்ல. இனமத வேறுபாடின்றி உலக மக்கள் அனைவருக்குமே சொந்தமான பெரு விழாத்தான் இது. இதில் எந்த விதமான அர்த்தமற்ற மதக் கொள்கைகளோ கிடையாது. மதவாதிகள் வேண்டுமானல் இவ்விழாவுக்கு ஆயிரம் கற்பனைக் கதைகள் சொல்லலாம்—தத்துவார்த்தங்கள் பேசலாம். ஆனல் நாடு செழித்து மக்கள் பஞ்சம் பிணி முதலியவைகள் இன்றி வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்க வாழும் நல் வாழ்வின் உயிர்கள்; கலப்பையும் காளையுமே அவர்களின் பூர்வீகச் சொத்துக்கள்; நிலம் வெழுக்குமுன்பே எழுந்து வயல்களிலே வலம் வருவார்கள். பகலெல்லாம் பசியும் பனம் கஞ்சியுமே அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும். விண்ணிலே வெள்ளிகளோ — வெண்ணிலவோ முளைத்தபின் வீடு திரும்புவார்கள். கொஞ்ச நேரம் தன் இழிமொழியாளிடமும் மழலைக் குழந்தைகளிடமும் கொஞ்சி விளையாடுவார்கள்; பின் தன்னையறியாமலேயே தூங்கிவிடுவார்கள்; இது தான் உழவுப் பெருமக்களின் அன்றாட ஓய்வும்—உலகமும். ஆனல் இயந்திரப் புரட்சியால்கூட ஏழை உழவன் உயர்ச்சி பெற்று விடமுடியாது;

அன்று வான் பொழிய பயிர் செழிக்க—தமிழ் வாழ தமிழராட்சி தழைக்க எம் பெரும் மன்னர்களால் இப் பெரும் விழாக்களெல்லாம் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. என்றும் பொங்கல் திருநாளாகவே இருக்கக்கூடாதா என்று ஏங்கித் தவித்தார்கள் மக்கள். அன்றைய தமிழ் மக்கள் தானம் கொடுப்பதற்கு யாருமில்லையே என்று அடுத்த நாட்டிலே இருந்து ஏழைகளை இறக்குமதி செய்தார்கள்; ஆனல் இன்றோ...அந்தோ பரிதாபம்.

குறிஞ்சி நிலத்தில் கொட்டிய தேனும்—முல்லை நிலம் அளித்தந்த பாலும் பசு நெய்யும்—மருத நிலத்தில் முத்து முத்தாக அறுத்த நெல் மணிகளும்—நெய்தல் நிலத்தில் கிடைத்த உப்பும்— அதே போல் பாலையிலும் பல்வகைப் பலன்களும்கண்டு எம் தாய் தமிழகமே தன்னைத்தானே எண்ணிப்பொருமைப்பட்ட காலமும் ஒன்று இருந்தது. ஆனல்—இன்றோ பனிபீடத்தில் சாய்ந்துவிட்ட பழைய நாட்கள் அது.மூடத்தனத்தின் முறட்டுப்பிடியிலே சிக்குண்டு வாழ்வை இழந்து வாடி நிற்கும் இந்நாடகள் விரைந்து செல்லும் காலத்தின் பின்னணியில் அறச்சுவடுகள் தெரியாமல் அழிக்கப்பட்டே தீரும்; இனி வரும் வாழ்வு மலருமா விடியுமா? வேதனை இருட்டு விலகுமா? வெம்பிய வாழ்விலிருந்து விடுதலை பெறுவோமா? என்ற ஏக்கத்தை

(10-ம் பக்கம் பார்க்க)

## தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளி விழா மலர்

தமிழ் மக்கள் எங்கு சென்று குடியேறி வாழ்ந்தாலும், தங்கள் தாய்மொழியாம் தமிழையும் தமிழ் பண்பாடு, கலைகளையும் இம்மியளவும் மறக்கமாட்டார்கள், அதுவும் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வெளியே — தமிழர் அல்லாதார் மத்தியில் வாழும் தமிழர்களிடம் தமிழின ஒற்றுமையுணர்வு சற்று அதிகமாகவே காணப்படுகிறது. தில்லியில் வாழ்ந்தாலும், லண்டனில் வாழ்ந்தாலும், அமெரிக்காவில் வாழ்ந்தாலும், தமிழின் பெயரால் சங்கம் அமைத்து அங்கெல்லாம் தமிழ் பரப்பி வருகிறார்கள் தமிழ் மக்கள்.

இந்திய துணைக்கண்டத்தின தலைநகராகிய தில்லி மாதகரில் கடந்த கால்நூற்றாண்டாக இயங்கும் தில்லி தமிழ்ச் சங்கத்தினரின் சீரிய தமிழ்ப்பணியை தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் அறிந்து பெருமைப்படத்தக்க விதத்தில் வெள்ளிவிழா மலரொன்றை அண்மையில் வெளியிட்டிருக்கின்றனர் தில்லி தமிழ்ச் சங்கத்தினர். தமிழின் மணம் பரப்பி ஒவ்வொரு தமிழனையும் மகிழ வைக்கிறது இந்த மலர்.

இம்மலரை உருவாக்கிய பெருமை தில்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களைச் சார்ந்தது. இந்தியம், ஈழம், மலேசியம் ஆகிய நாடுகளில் வாழும் அனைத்துத் தமிழருக்கும் பயன்படும் வகையில் இம்மலரை உருவாக்கியுள்ளார் சாலை இளந்திரையன்.

"காலந்தோறும் கோலம் மாறிக் காட்சி தந்து வந்துள்ள தமிழின் நெடுவரலாற்றை இதுபோன்ற ஒரு மலருக்குள் முழுமையாக அடக்கிக்காட்டுவது என்பது இயலாத காரியம். ஆயினும் இயலாதது என்று கருதப்படுவதைச் செய்துகாட்டிவிட வேண்டும் என்னும் வேகவீறு தான் மனிதத்துடிப்புகளுக்கே அடிப்படையாக உள்ளது. தமிழின் பழைய செழுமையும் புதிய வளர்ச்சியும் துலங்கித் தெரியும் வண்ணம் வரலாற்று முறையிலும் முத்தமிழ் என்னும் பரவை கொட்டியும் இம்மலர் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை முறையே உலகத் தமிழ், பழைமைத்தமிழ், சமயத்தமிழ், புதுமைத் தமிழ், இசை — நாடகத் தமிழ், வகைமைத் தமிழ் என் என்னும் வெவ்வேறு நிலைமைகளை உணர்த்துமாறு மலரின் பகுப்பமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. புதுமைத் தமிழ்ப் பகுதியில் இக்காலக் கவிஞர் ஐவரின் குரல்கள் இணைந்து ஒலிக்கவும் வகைசெய்யப்பட்டது. இந்தியத் தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்திலும், சிங்கப்பூர் மலேசியா முதலான இடங்களிலும் கொடிவீசிப் படர்ந்துள்ள தமிழைப் பற்றிய இந்த மலரில் ஆங்காங்குத் தமிழ் வளர்ச்சி எவ்வெவ்வாறு உள்ளது என்பதைப்பல அறிஞர்கள் விரிவாக விளக்கியுள்ளார்கள்...'

இவ்வாறாக தமது முன்னுரையில் கூறியிருக்கிறார் மலரை உருவாக்கிய டாக்டர் சாலை இளந்திரையன். மலரைப்புரட்டும்போது அவரது கூற்று அப்படியே உண்மையென்பதை நாம் உணர்கிறோம்.

பல்கலைச் செல்வர் தெ. பொ. மீ., பேராசிரியர் மா. இளையபெருமாள், துணைவேந்தர் டாக்டர் மு. வ., டாகடர் சுப. அண்ணாமலை, பேராசிரியர் அ. தெட்சணாமூர்த்தி, டாக்டர் மு. கோவிந்தசாமி, மயிலை சினி வேங்கடசாமி, கி. வா. ஜெகநாதன், டாக்டர் துரை சிங்காரவேலன், இரசிகமணி, கனக. செந்திநாதன், ஈழத்து மகாகவி, டாக்டர் சாலை இளந்திரையன், கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோருட்பட 48 பல்துறை அறிஞர்களின் எழுத்தோவியங்கள் மலருக்கு சுவையூட்டுகின்றன.

தமிழ்த்தாயின் கீர்த்தியைப் பரப்பும் இணையற்ற பொக்கிஷமாக வெளிவந்துள்ளது இம்மலர். இதை உருவாக்கிய சாலை இளந்திரையன் அவர்களை எத்தனை பாராட்டினாலும் தகும்.

இம்மலரின் விற்பனை உரிமையை சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் ஏற்றுள்ளனர். விலை ரூ 15,00.

—கேசவை.

## கே. எஸ். ஏ. கபூர்

(எருக்கலம்பிட்டி)

அமைப்பையே எம் பழம் பெரும் தமிழகம் உழவுக்கும் தொழிலும் மதிப்பளித்துப் பொங்கல் விழாவை வகுத்துத் தந்தது.

ஒரு நாட்டு மக்களின் வாழ்வு செம்மையாக அமையவேண்டுமானல் இயற்கைப் பொருட்கள் தத்தமது தொழிலைச் சரியாகச் செய்தாக வேண்டும். சூரியன்-காற்று-மழை போன்றவைகள் காலாகாலங்கள் தவறாது தமது கடமைகளைச் செய்வதால் மக்கள் நிலையும் நினைப்பும் நிறைந்த மகிழ்ச்சிக்குரியதாகின்றது. அங்கே-

தங்க நிறக்கதிர்கள் பூத்துக் குலுங்குகின்றன. அதைக் காத்து வளர்த்த உழவனின் உள்ளம் பூரிப்படைகின்றது. அப்போது அவனது கண்களிலே நம்பிக்கைக்குரிய புதிய ஒளி வீசுகின்றது. தூயகலை நீரின் போசனையால் ஆர்த்தெழும் அழகு மணிக்கதிர்கள் அவனின் இல்லந்தோறும் அணி அணியாய் குவிந்து கிடக்கின்றன. மறுபுறத்திலே விரித்த மஞ்சள் இலையும் — தித்திக்கும் செங்கரும்பும் திரயபி வழிய —மகர தோரணங்கள் வீடுகளெல்லாம் காட்சிதர உழவனின் உள்ளமெல்லாம் மகிழ்வால் நெகிழப் பிறந்த நாள இந்நாள். ஆனல் உலகையே தம் பெருங்குணத்தால் வாழவைக்கும் இவ்வுனவர்களுக்கோ காரும் கனியுமே தொழிற் கூடம்; [illegible] சாலை. மனைவியும் மக்களுமே அந்த உழைப்பாளிகளின்

## பொங்கி எழு தோழா

— "மணிக்கவிராயர்" —

இங்குதமிழ் ஓங்குபுகழ்
உற்றிலங்க வேண்டும்!
இங்கு தடை யின்றிதமிழ்
தரமுயர வேண்டும்!
சங்குளவர் இடர்தரினும்
தூங்குவதோ தோழா!
வீங்குபுயம் தட்டியொரு
வேழமென எழுக!

★

சங்கமதில் தங்கமென
செந்தமிழ் திகழ்ந்த
சங்கினைநகள் இன்றெமக்கு
சீர்வரிசை தருமோ?
நீங்கிழைத்து தண்டமிழை
தடந்தெரியா தொழிக்க
இங்களவர் முனைகின்றார்
பொங்கியெழு தோழா!

★

வங்கமதில் வங்கமொழி
வந்தவிதம் காண
பொங்குதடா ஆவேசம்
போர்க்கணமே காண!
'சங்கரரும்' — 'சூரியரும்'
செங்குருதி கண்டே
தங்களுயிர் தஞ்சமென
தாள்பணிய எழுக!

★

மங்குபுகழ் கொண்டமொழி
ஓங்குபுகழ் கொண்ட
எங்கள்மொழி — ஒண் தமிழை
எங்ஙனமோ வெல்லும்?
கங்குலினை கிழித்துஎழும்
செங்கதி ரோனெப்ப
சிங்கமென பங்கமது
களைய எழுதோழா!

★

செங்குருதி சிந்திடினும்
சிந்தைதனி லுதித்த
தங்கநிகர் தரங்குன்று
கொள்கை வழிவாழ
பொங்கலின்று பொன்னுனிக
பூசல்களை விட்டு
பொங்குதமி ழுணர்வால்
பூண்சபதம் தோழா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரங்க காவிய நாடகம் (வசன கவிதை)

# மறத்தமிழனும் மரத்தமிழனும்

(நீர்வை 'இரதி')

முகவுரை:—

தமிழ் அழகன் ஒரு புலவன்; சுதந்திர தாகமும், தமிழ்ப்பற்றும் மிக்கவன். ஈழத் தமிழ் நாட்டில் தமிழ் அன்னை படும் பாட்டைக் கண்டு நெஞ்சம் புண்ணுகி தமிழ்த் தாயின் விடுதலையே தன் இலட்சியமாகக் கொண்ட மறத் தமிழன். இந்த வீர இளைஞனுக்கு எதிர்மாருனவன் எட்டப்பன். மாற்றானின் காலைக் கட்டிப் பிடித்தாவது அவர்கள் எறியும் எச்சிலைப் பெற்றுவது வயிறு வளர்க்கும் ஈனப்பிறவி. தமிழ் அழிந்தாலென்ன, தன் இனம் ஒழிந்தாலென்ன, தன் வயிறு நிறைந்தாற் போதும் என எண்ணும் அவமானப்பிறவி இந்த எட்டப்பன். இந்த இருவரும் சந்திக்கும் இடம் ஓர் அழகிய பூங்கா. (தமிழ் அழகன் போன்ற இலட்சிய வீரரும் எட்டப்பர் போன்ற ஈனப் பிறவிகளும் நிறைய நம்மிலும் உண்டு.)

தமிழ் அழகன்: (தனிமையில் தமிழின் நிலையை நினைந்து நொந்து பாடுகிறன்)

அன்னை தமிழே ஆரணங்கே என்னை ஈன்ற பொற்ருயே
உன்னை வாட்டும் துயரத்தை நானறிவேன்
கன்னற்சாறே கற்கண்டே
தமிழில் நல்ல சொற்கொண்டே கவிதை ஆயிரம்
அமிழ்தில் இனிதாய் ஆக்கிவைப்பேன்
பொழுதும் விடியும் எம் பொற்செல்வி
தொழுது மாற்ருர் உன்னைத் துதிப்பார்
பழுதில்லாது பாரில் உயர்ந்திடுவாய்

எட்டப்பன்: (எங்கிருந்தோ வருகிறன்)

யாரடா கவிஞனங்கே ஏதடா உளறுகிருய்?
சோர்கிருய் மயக்கத்திலே சோறடா இன்றி நீயும்
வாஅடா என்னுடனே உன்வாதனை போக்குகிறேன்
பாடடா தமிழில் கவிதை பாராளுமரசைப்போற்றி
தேடடா பொன்னைப் பொருளை — பின்னை
ஓடடா காரிலேறி ஒய்யாரி தன்னருகில்
வீடடா கட்டிடடா உல்லாச புரிபோலதில்
கூடடா கன்னியுடன் சொன்னதை புரிந்திடடா

தமிழ் அழகன்:

சுதந்திரதாகம் கொண்டு துடிக்கிறேன் துயரிலிங்கு
மடிந்திடும் போதிலும் மறந்திடேன் விடுதலைநான்
கொடுந்துயர் பற்றிடினும் கொள்கைதான் விட்டிடேன் நான்
முடிபுனைந் துயர்ந்த தமிழிலைப் பாடுவேன் நான்
விடுதலை வேண்டிடும் வீரரைப் பாடுவேன் நான்
சுதந்திர தாகம் கொண்ட கவிஞரைப் பாடிடுவேன்
பிடியுணவின்றியே பிரிந்திடினும் என்னுயிர் தான்
ஓரடி தன்னும் பாடேன் மாவேர அரசையிங்கே

எட்டப்பன்:

வாழவே தெரியா வீணன் தாழ்வுதானுக் குண்டாகும்
ஆழமாய் உன்மேல் பந்தன்பினுல் செப்புகின்றேன்
பாழதாய் போய்விடாதே வாழ்ந்திடும் வகையைப் பாரு
வாழ்த்தியே தமிழைப் பாடினுலுன் வயிறுதான் நிறையுமோ
மாற்றியேயுன் கொள்கை தன்னை — மந்திரிமாரைப்பாடு
நேர்த்தியாய் வாழலாம் நித்தமும் சோறுகிடைக்கும்
பார்த்தியே வாழ்கிருர் பந்தம்பிடித்திடுவோர்
புத்தி இதுவாகும் புரியுதா யாதைதெரியுதாப்பா?

தமிழ் அழகன்:

எச்சிற்சோறுதான் எந்த நாய்க்கும் கிடைக்கும் போ
பச்சையாய் சுய இச்சையே பேசுகிருய்
சீச்சீ நீயுந்தான் தமிழ்மகனே
உச்சியில் வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லையென்று அன்று சொன்ன கவிஞனை
மெச்சிடும் கவிஞர் பாமென அறிந்திடு நீ
துச்சமாய் மதித்திடுவோம் வருந்துயர் யாவுமே
பிச்சைதான் வேண்டிடில் போ வால்பிடி

எட்டப்பன்:

அரசையே பகைக்கிருய் ஆணவமாய்ப் பாடுருய்
சிரசுதானுடையும் சிறைதான் கிடைக்கும்
தம்பி நீ சிந்தி கம்பிதான் எண்ணுவாய்
கல்லுத்தானுடைப்பாய் புல்லுத்தான் செதுக்குவாய்
மெல்லத்தான் நலிவாய் அல்லல்பட்டழிவாய்
சொல்லத்தான் முடியுமோ சிறையுறும் வேதனை
தொல்லைதான் பெரிது சுகமுனக்கு சேது
பல்லைத்தான் காட்டி பதவியைத் தேடு

தமிழ் அழகன்:

சிறைதரு துயரம் நிறைய, நானறிவேன்
சிறையுற்ற வாழ்விலும் சிறை பெரிதன்று
பொறையுடன் அங்கும் பாடுவேன் கவிதை
உறையினுள் இட்ட வாள்போற் கிடக்கிறேனிங்கே
அறைதான் கேட்கின் விடுதலை முரசின்
ஆர்த்தெழும் தமிழ்க்குலம் அன்னை விலங்கொடியும்
போர்க்களத்திலே பாடிடுவேன் பரணி

எட்டப்பன்:

பாரதத்தில் பாபூஜி என்ருெர் பக்கிரி
தென்னகத்தில் அண்ணு என்ருெர் போக்கிரி
செல்வா என்ருெர் இங்கோர் வீணர்
தன்னகம் சேர்த்தார் கொள்கை பரப்பி
இளைஞரெல்லாம் கெட்டார் தொட்டார் விடுதலை
சுதந்திர தாகமாம் சுதந்திர தாகம்!
சுகந்தருமோ இங்கு சோறுவருமோ
தந்திரமாக வாழ்ந்திடிலே இந்திரனுக உயர்ந்திடலாம்

தமிழ் அழகன்!

சுதந்திரமே எங்கள்மூச்சு அதுவரை பெருமூச்சு
விடுதலையேயெம் உயிர்நாடி ஓடிப்போ பேடி
தொடுத்திடுவேன் தமிழ்ப்பாட்டு என்னைக்
கொடுத்திடுவேன் தமிழ் தாய்க்கு
ஒடித்திடுவேன் அவள் விலங்கை
முடித்திடுவேன் அவள் பகையை
விடுத்திடுவேன் (ஈழத்) தமிழ்நாட்டை
பிடித்திடுவேன் தமிழ்க் கொடியை

எட்டப்பன்: (தன்னுள் எண்ணுகிருன் — ஓசை பின்னணி)

கெட்டது நாடு கெட்டது தமிழினம்
தொட்டது விடுதலை வேட்கை இங்கே
பட்டது பஞ்சில் நெருப்பது போன்று
சட்டெனப் பறந்தது சுதந்திர நெருப்பு
விட்டிதை வைத்திடில் விடிந்திடும் வாழ்வு
மடிந்திடும் அடிமையெம் வேலை
முடிந்திடும் வரையில் முயன்றிடவேண்டும்
பிடித்தே யிவனை அடைத்திடல் வேண்டும்

(எட்டப்பன் கைதட்ட ஊர்காவலர் வருகிறார்கள்)

எட்டப்பன்:

பாவலன் இவன் தன் நாவலியாலே
கேவலமாக அரசைத் தூற்றினன்
தோள்வலிமிக்க இளைஞரைக் கூட்டி
தூபமிட்டே புரட்சிக்குத் தூண்டினன்
அன்னை தமிழைக் காப்பேனென்றான்
அடிமை விலங்கை ஒடிப்பேனென்றான்
இன்னமும் விட்டால் சும்மாயிரான்
சொன்னபடியே செய்தும் முடிப்பான்
தந்தை கொள்கை பரப்பிடும் கவிஞன்
மந்தைத் தமிழரை விழித்திடச் செய்வான்
விந்தையாய்த் தெரியுது இவன் செயலிங்கே
முந்தியே சென்று இவன் கவிபடிப்போர்
செந்திப் போலே சீறியெழுந்தே
சொந்த மொழியைக் காக்க முயல்வர்
உந்தக் கவிஞனை உலகில் விட்டால்
மந்தமேயாகும் மாவேரா ஆட்சி
கையிலே விலங்கைக் கடிதே மாட்டு
பொய்யில்லை இவனோர் புரட்சிக் கவிஞன்
மெய்யிலே கசையால் வீசியடி
உய்யவே விடாது சிறையிலே பூட்டு
தொய்யட்டு உடலம் உணவு கொடாதே
நையவே நைய நலிந்துருகட்டும்
பையவே பைய இப்பாவலன் தன்னுயிர்
பெய்யதைவிட்டே மேலுலகேகும்

(ஊர்க்காவலன், எட்டப்பன் ஏவ தமிழழகன் கையிலே விலங்குமாட்டினன்; எட்டப்பன் கெக்கட்டம் விட்டுச் சிரிக்கிறன்)

தமிழ் அழகன்

அட அட எட்டப்பா அட்டகாசமாய் சிரித்திடாதே
விடு விடு என்றே வருவார் தமிழ்வீரர்
தடு தடு என்றே நீ தடுத்திடினும்
அடி அடி என்றே அடித்து முறித்தாலும்
சுடு சுடு என்றே சுட்டொழித்தாலும்
தொடு தொடு என்றே அறப்போர் தொடுப்பார்
பொடு பொடு என்றே அடிமை விலங்கொடியும்
சட சட என்றே தமிழ்க் கொடி பறக்கும்

(வேறு)

ஓமென்று ஒலித்தது செவ்வானம்
ஓமென்று கத்திற்று கடலோசை
ஓமென்று அடித்தது புயற்காற்று
ஓமென்று உரைத்தது தமிழர்தம் மூச்சு
ஓமென்று அசைத்தான் இறைவன் தலையை
ஓமென்று இசைத்தாள் சக்தியும் கூட
ஓமென்றுயாவும் ஒலித்தது கேட்டே
ஆகா! வென்றே தலைநிமிர்த்தாள் தமிழ் அன்னை

(முற்றும்)

---

# பொங்கித் திகழ்க பொலிந்து

(செல்வி சியாமளா)

வையம்மகிழ் சிறப்புடன் வானவர்கோன்சீர் கொடுப்ப
தையும்பிறந்தது காண்மைதயலர்தம் — மைமடலெலாம்
பொங்கிச்சிறந் தோரனிரப் போதுமலர்வனபோல்
எங்கும் மலர்க இதம்

உன்னை உவகையிக்கும் உழவர் திருநாளில்
மண்மீது வானம் மழை பொழிய — விண்ணவர்கோன்
வானம் வழங்கிடவே மாண்பின் வரந்தருக
ஞானம்துலைக்க நயந்து.

ஆண்டுபல ஆண்டாய் அகிலத்தில்யாரும்
மாண்புடனே கொண்டாடும் மங்கலநாள் — வேண்டுவன
என்றும் மலிக! இறைவா! கல்வி செல்வம்
பொங்கித் திகழ்க பொழிந்து



## வாணிபம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அந்நியருக்கு
சம உரிமை

யாழ்ப்பாணத்தின் மிகவும் பெரிய சந்தை நகரில் இருந்தது. இச்சந்தையில் மட்டுமே பஞ்சு, நூல், தோல் முதலியன தக்கழியருக்கும் (நூல் நூற்பவர்) நெசவாளருக்கும் துன்னருக்கும் (தோல்கொல்லர்) விற்கப்பட்டன; பஞ்சு விற்பனை ஒரு வர்த்தகக் குழுவின் கையில் இருந்தது. அவர்களே பஞ்சைக் கடைந்து எடுத்த விற்றனர்; வெளி நாடுகளில் இருந்து இறக்குமதியான பொருட்களும் இச்சந்தையிலே விற்கப்பட்டன. நெல்லு, அரிசி மொத்த விற்பனை மூத்தன் அல்லது தரகன் என அழைக்கப்பட்ட குழுவினால் நடத்தப்பட்டது. அவர்கள் இறக்குமதி செய்த அரிசியை நெல்லை அரசனுடைய பட்டயத்தில் வைத்து விற்பனை செய்யும்பொழுது எடுத்தனர். விற்கப்படாதவையை அரசனுடைய பட்டயத்தில் திரும்ப வைத்தனர்.

யாழ்ப்பாணத்தில் குளங்களிலே நெல் பயிரிடப்பட்டது: அக்கால நெல் ஆறு மாத காலப் பயிராய் இருந்தது. இக்குளங்களையே போத்துக்கேயர் கமம் என அழைத்தனர்; இக்குளங்களில் பயிரிடப்பட்ட நெல்லு அரி என்றும், குளவாளை என்றும் அழைக்கப்பட்டன: இக்குளங்களைப் பராமரித்தவர்கள் கங்காணிகள் என்று அழைக்கப்பட்டனர்: விளைவிக்கப்பட்ட நெல் கோட்டாரம் எனப்பட்ட களஞ்சியங்களில் சேகரிக்கப்பட்டு பின்பு அரசனுடைய பட்டயத்துக்கு அனுப்பப்பட்டது;

வெளிநாட்டு வியாபாரத்திற்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக வணிக நகர்களாகிய மாதோட்டைப் பட்டணம், கந்தா நகர், நயினித் தீவு அமைந்தன: இங்கு ஏற்பட்ட சந்தைகள் யாத்திரிகர்கள் கோவிலில் கூடிய காரணத்தால் உண்டாயின. இங்கு வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விற்பனவு செய்வதற்கு அநேக கொள்வனவு செய்வோரைக் கண்டனர். இங்கு வருடம் முழுவதும் வியாபாரம் நடந்தது. இந்நகர்கள் வெளி நாட்டவரை வரவேற்றன; வேற்றுமைகள் இருக்கவில்லை. வியாபாரம் செய்வதற்கும் கடைகள் திறப்பதற்கும், வாங்குவதற்கும் விற்பதற்கும் அந்நியருக்கும் நாட்டு மக்களுக்கும் சமவுரிமைகள் இருந்தன. ஆதலால் பல நாட்டவரும் இங்கே ஒற்றுமையாய் வாழ்ந்தனர்; வணிகரும் தொழில் புரிவோரும் தங்கள் குழு அமைப்புகளில் இருந்தனர். சுங்க வரிகளையும் வேறு கட்டணங்களையும் அரசாங்க உத்தியோகத்தர் வணிக தொழில் குழுக்களின் தலைவர்களின் உதவியுடன் வசூலித்தனர்.

### வாணிபத்தில் வளம் பெற்ற யாழ்ப்பாணம்!

வியாபார ஒப்பந்தங்கள் யாவற்றிலும் அரசமுத்திரை பதிக்கப்பட்டது. நிலத்தின் வாடகை, கொட்டில்களின் வாடகை நிரந்தரமாய் இருந்தது; ஒரே விதமான பண்டங்களை விற்போர் ஒரே இடத்தில் பண்டங்களை வைத்திருந்தனர். வியாபாரிகளையும் அவர்களது பண்டங்களையும் பாதுகாப்பதற்கு காவலாளிகள் (கூலியர்) அரசர்களினால் கொடுக்கப்பட்டனர். பிறநாட்டு நாணயங்களை ஆராய்ந்த கணக்கர்களுக்கு புறம்பான வசதிகள் செய்யப்பட்டன. இவர்கள் நாணயங்களைச் சோதித்தனர். கடன்களைக் கொடுத்தனர்; தங்களுக்குச் சேரவேண்டியதைச் சேகரித்தனர்: இவர்கள் தட்டாரில் செல்வந்தர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்-எங்கள் உயிர்

## பேராசிரியர் க. அன்பழகன்

(தமிழக நலத்துறை அமைச்சர்)

பிறந்த குழவிக்கு உயிருள்ளது என்பதை மூச்சு காட்டுவதை அடுத்து அதன் அழுகையும் அதைக் காட்டும். அழுகையில் பிறக்கும் அதன் குரல் மெல்லப் பேச்சுக்கு இடமளிக்கிறது: அந்தப் பேச்சு அதன் தாய் மொழியன்றோ! ஆம், தாய் அதனிடம் கொஞ்சிப் பழகிய மொழி அது என்பதாலும்— தாயின்மொழி—தாய்மொழி எனல் பொருந்துவதன்றோ!

ஒருவன் வாழ்கிறான் என்பதற்கு மூச்சு அடையாளம் ஆவதைப்போன்று, பேச்சும் அடையாளம் ஆவது. இதனை ஒருவன் உயிர் ஊசலாடும் நிலையில், அவனுக்குப் பேச்சு மூச்சு இல்லை என்னும் வழக்கால் அறியலாம்.

ஒருவன் நிலையிழந்து, மதி மயங்கிய வேளையிலும் உறக்கங்கொண்டு கனவு காணும் நிலையிலும் — தெளியாமலே பேசும் பேச்சும் அவன் தாய் மொழியாகவே இருப்பதைக் காண்போர்—தாய் மொழி உயிருடன் ஒன்றி நிலவுவதை உணரலாம். தாய் தந்த உயிரோடு ஒட்டிய மொழி அது வன்றோ!

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்னும் பொன்மொழிப் பொருளை உன்னுவோர், அந்த எண்ணும் எழுத்தும்—அவரவர் தாய் மொழியின் வடிவையே இயல்பாகக் குறித்தலைக் காண்பர். ''எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ்விரண்டும் —கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்றார் வள்ளுவர். பிற உயிர்கட்குக் கண்கள் எவ்வளவுமேம்பட்ட உறுப்புக்களாக வாழத் துணையாவனவோ, அதனையொப்ப மனிதர்க்கு வாழத் துணையாவன எண்ணும் எழுத்துமாகும் என்பது கருத்து. பிற உயிர்கட்கு— கண்களே யாவும் காட்டுவன—கண்கள் காட்டும் அளவே அவை காணக்கூடும். மாந்தர்க்கு கண்ணினும் மேலான பார்வையைத் தருவது மொழி. அப்படித் தரும் வாய்ப்பும்—சிறப்பும்— தாய் மொழிக்கே மிகுதியாகும்.

கண்ணிருந்தும் அந்தக் கருவி துணையாகக் கற்றறியாதவர் குருடர் எனப்படுவதுமட்டுமன்றி குருடர் எய்தாத துன்பத்தையும் அவர்கள் எய்துவர் என்பார்.—

கண்ணுடையர் என்போர்
கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார்
கல்லாதவர்

எனத் தெளிவுறுத்தினர் (வள்ளுவர்.)

அதற்கு புண்களால் பெருந்துன்பம் அடையாது—எண்ணும் எழுத்தும் தெளியாதவரையும்-கேள்விச் செல்வத்தால் தெளிவிப்பது தாய் மொழியே.

இதனால் உறுப்புள்ளே உயர்வான கண்ணினும்— மேலான பயன் செயவது தாய் மொழி அறிவு என்பது தெளிவு.

பிறந்த குழந்தையின் செவிப்புலன் திறப்பது அதன் தாயின் மொழியினாலே, தாயினது தாலாட்டுக்கேட்டு குழந்தை அமைதியுற்றுஉறங்குவதும் தாய் மொழிப் பாட்டிலேயே.

குழந்தை தளர் நடையிடுவதும், சாய்ந்தாடுவதும், ஆடுவதும் ஓடுவதும் தாய் மொழியோடு! கல்வி கற்க முற்பட்டு அறிவதும் தெளிவதும் தாய் மொழியாலே! நம்பியாக நங்கையாககாதல் மொழி பேசிக் களித்துக் கிடப்பதும் தாய்மொழியில்! வாழ் நாள் முழுவதும் உள்ளத்துடன் ஒன்றிக்கிடப்பது, ஊறிச் சுரப்பது தாய்மொழி.

உண்ணல், உடுத்தல்,
உழுதல்—தொழுதல்,
கைத்தொழில்—கலைப்பயிற்சி
காவியம்—ஓவியம்,
காதல்—மோதல்,
மறப்போர்—அறப்பணி

ஆகிய அனைத்திலும் மனிதனுடன் உடனுறைந்து வாழ்விப்பது தாய்மொழி.

ஒருவனது கண்ணாக, காதாக வாயாக, வாழ்வாக, அமைவதன்றி, அவனது பெற்றோருக்கும், அவர் தம் முன்னோருக்குங்கூட (பெரும்பாலும்) அவ்வாறே அமைந்து நின்றது அத்தாய் மொழி.

இன்று என்னை வளர்க்கும் தாய்மொழி; என் மனைவி, மக்களையும் வாழ்விப்பது என் உற்றார் உறவினரையும் காத்தளிப்பது, என் இனத்தவரையும், நாட்டவரையும் இணைத்திடுவது—என்பதுமட்டுமன்றி, என் பெற்றோரை பாட்டன்மாரையும் அவர் தம்முன்னோரையும்வளர்த்துவிட்டது! இன்று என் தாயாக விளங்கும் மொழி, இருபது நூற்றாண்டுகட்கு முன்னரே வள்ளுவரை ஈன்றது! வளர்த்தது! வாழ்வித்தது! வாழும் வழியைப் பிறருக்கு அறிவித்த அவருக்கு அறிவுப் பாலும் ஊட்டியது! அதற்கும் முன்னரே தொல் காப்பியம் தந்த தொன்மைப் புலவனைத் தோற்றுவித்தது! சங்கப் பெரும் புலவர்களையும் காவியக் கலைஞர்களையும்— உலகுக்கே ஈன்றளித்தது! என்றெண்ணுகிற தமிழ் மகன் எவனுக்குத்தான்— தன் தாய் மொழி 'தமிழ்' என்பதிலே பெருமிதம் பிறக்காது!

அகத்தியன் என்னும் ஆசானும், 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்' என்பாராகில், தமிழரின் தொன்மையும் மேன்மையையும் கணக்கிடலாமோ!

என்னையன்றி எண்ணித் தொலையா என் முன்னோரையும் வளர்த்தவள் என் தாய் மொழியல்லரே! அவ்வாறயின் என்னுடலில் பாயும் குருதி—தமிழ் குருதியாகாதோ? என் என்பினிலே உள்ள வலிவு—தமிழ் வலிவன்றோ? என் தசையும் சதையும், நாரும் நரம்பும்—தமிழ் எண்ணும் எழுத்தும் அல்லவோ? என் அறிவும் பண்பும் தமிழ் சாறு அல்லவோ?

என் பெற்றோர் எனக்குத் தேடி வைத்த செல்வங்கள் யாவற்றினும் அருஞ் செல்வம் தாய் மொழியன்றோ அச் செல்வத்தை, உருக்குலையாமலும், ஒலி கெடாமலும் அழிவுக்கு இடமின்றி, மேலும் வளர்த்துத் தம் வழியினருக்கு உரித்தாக்குவது ஒவ்வொருவருக்கும் கடமையாகாதோ?

பிற செல்வங்கள் அழிவுறினும் அவை ஆக்கப்படகூடும் வழிவழி வந்து வாய்மொழி நிலைத்து மனமொழி மெய்களுடன் கலந்து காவியத்தில, கலைக்கூடத்தில் கற்பனைப் பொலிவு பெற்றுத் திகழும் தாய்மொழி—அழியவிடப்படின் பின்னர் ஆக்கப்படவும் முடியுமோ!

பரப்பு இடையிட்டுவாழும் பல நூறு ஆயிரம் மக்களிடையே, (நான்கு கோடி தமிழரிடையே) தொடர்பு செய்விக்கும் மொழியில் மட்டுமின்றி—பல நூறு ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியப் புலவர்களையும்— காலம் இடையிட்டும் — நம்மோடு உரையாடி உறவாடச் செய்யும் தாய் மொழியின் தண்ணளி சொல்லுந்தரமோ!

அதன் மாட்சியை உணர்ந்ததாலன்றோ புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்

'தமிழும் நானும், மெய்யாய்
உடலியுர் கண்டீர்'
'தமிழ் என் அறிவினில்
உறைதல் கண்டீர்'
'தமிழை என்னுயிர்
என்பேன் கண்டீர்'
'இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர்'
'உயிரை உணர்வை
வளர்ப்பது தமிழே'
'தமிழ் எங்கள் பிறவிக்குத்
தாய்'

என்றெல்லாம் எழுச்சி மிகப் பாடினார்.

அத்தகு தமிழுக்குப்பிறந்து தமிழுடன் தவழ்ந்து, தமிழினிலே ஆடி, தமிழையே பாடி, தமிழே மூச்சாக உயிர்க்கும் நாம், அம்மொழியை இழத்தற்கு ஒருப்படலாமோ?

மக்களின் கூட்டு வாழ்வில் ஒவ்வொரு துறையிலும், அமைப்பிலும் இடம்பெற வேண்டிய நந்தாய் ஒதுக்கி வைக்கப்படுவதும், புறக்கணிக்கப்படுவதும் முறையாமோ?

குடும்பச் சடங்கு
கோவில் வழிபாடு
இசை யரங்கு
கூத்து மண்டபம்
வானொலி நிகழ்ச்சி
சட்டமன்றம்
ஆட்சித்துறை
நீதி நிருவாகம்
உயர்தரக் கல்விக்கூடம்
விஞ்ஞானப்பயிற்சிநிலையம்

ஆகிய எத்துறையாயினும் —தாய் மொழியே ஆட்சி செய்ய வேண்டும். மாறாகத் தாய் மொழி உரிமையால் தமிழ் பெறவேண்டிய உயர்வினை இழத்தற்கு எதுகாரணமெனினும் அதனை ஏற்கலாகாது.

'தாயிற் சிறந்த கோவில்
இல்லை'
'தந்தை சொல் மிக்க
மந்திரமில்லை'
'அன்னையும் தந்தையும்
முன்னறி தெய்வம்'

என்னும் முதுமொழிகள் பெற்றோரின் அருமை பெருமையை உணர்த்துவன. கண் கண்ட தெய்வம் எனத் தாய் நமக்கு அருள் செய்தும், அவளைப் போற்றாதும், தந்தையை மதிக்காதும்,

தெய்வத்தைத் தேடி
அலைவானேன்
திருக்கோவில் நாடிச்
செல்வானேன்

என்பது கருத்து. தெய்வமும் திருக்கோவிலும் வேண்டாம் என்பதற்கன்று நான் இதனைக் காட்டியது:

பெற்றோர் பெருமையை, அன்னையின் அருமையை உணர்த்த—தெய்வமாக அன்றோ கூறியுள்ளனர். அந்தத் தெய்வச் சிறப்புடைய தாயுடன் ஒப்பவைத்து 'தாய்மொழி' என்றழைக்கப்படும் மொழியினிடத்தே நாம் எந்த அளவுபற்றுவைக்க வேண்டும்? தாய்மொழியே— தெய்வமாய், அம்மொழி இலக்கியங்களே திருக்கோயிலாய், அதனைக் கற்பதே வழிபாடாய், அதனை வளர்ப்பதே திருப்பணியாய்— அன்றோ மேற்கொண்டிருக்க வேண்டும்?

மாறாகத் தாய்மொழிப் பற்றினைப் பிறமொழி வெறுப்பாகக் காட்டி, இப்பற்றினை மாற்ற முனைவார் பலராக உள்ளனர். பிறமொழி எதுவாயினும், அதனை விரும்பிக் கற்று வெறுக்காது போற்ற வேண்டுமேயன்றிக் கடிதல் கூடாது என்பது அவர் எண்ணம். அவர் தாமும் தம்தாய்க்குத் தரும் தனிச்சிறப்பினையும் உள்ளன்பினையும் பிறிதொருத்திக்குத் தரவும் இசைவார் போலும்!

பிறிதொரு மொழி— தாய்மொழியை அழிக்கவோ அழுத்தவோ முற்படாதபோது அதனையார் தான் வெறுப்பர்? திருடச் செல்லாதவனை யார்தான் விரட்டிப்பிடிப்பர்? அதனால் கருதும் பயன்தான் யாது? ஆனால் தாய்மொழியின் நல்வாழ்விற்கும் ஆட்சி உரிமைக்கும் ஊறு செய்யும் நிலையில் ஒருமொழி வருமானால்— யார்தான் அதனை வெறுக்காமல் இருக்கக்கூடும்?

தாய்க்குத் தரும் பீடத்தைத் தன் ஆணைவிக்கும் தர முடிவதில்லையே! அப்பீடத்தை ஒரு தளுக்குக் காரிக்குத்தந்து கைகட்டிச் சேவகம் செய்வது தன்மானமுள்ள செயலாகுமோ!

தாய்மொழிப் பற்றுடையோர் செயலைப் பிறமொழி வெறுப்பு எனச் செப்பித்திரிவோருக்கு ஒரு தக்க விளக்கத்தைப் புலவர் பாராட்டும் கவிஞர் முடியரசன் அவர்கள் படைத்துள்ள 'பூங்கொடியில்'—அதன் தலைவியான பூங்கொடியைப் பேசவைத்துள்ளார்.

பூங்கொடி கூறுவது இது:-

''அகத்தும் பிறமொழி
வெறுத்திடல் அறிகிலம்
பகுத்தறி வுடையோம்
பண்பும் உடையோம்
''குறுமன மென்றும்
விரிமன மென்றும்
சிறுமன முடையோர்
செப்புவ கொள்ளேல்
தன்னலம் பேணின்
குறுமன மாகும்
தன்னல மறுப்பது விரிமன
மாகும்
முன்னவர் பேணிய
மொழியும் நாடும்
மன்பதை முழுமைக்
குரியன வன்றோ!''
''உரிய நம்மொழியே
உயர்வுறல் வேண்டி
இரவும் பகலும் இடரிலும்
முயல்வோம்!
''யாதும் ஊரெனில்
எம்முடை ஊரகம்
தீதுறல் வேண்டுமோ?
சீருறல் தீமையோ!
யாவரும் கேளெனில்
யாயுடன் தந்தையும்
மேவருங் கேடுகள் மேவுதல்
வேண்டுமோ?''
''உலகப் புகழ்பெறு
தலைவரும் கவிஞரும்
பலகற் றடங்கிய பண்புயர்
மாந்தரும்
தாய்மொழி வேட்கை
தணிந்திலர் துறந்திலர்;
ஆய்புலப் பாங்கினர்
அறிகுவர் இதனை;
தமிழின் பகைவர் சாற்றும்
மொழியினை
உமிழ்க! மெய்ம்மை
உணர்க! எழுக!''

இதனைக்கேட்டும் தெளியாதார் தெளிவுற்றோரே!

தாய்மொழி தாழ்வுறின் அம்மக்களும் தாழ்வுற்றுக் கெடுவது கண்கூடு. தாய் மொழியேதான்—ஒரு சமூகத்தின் மூச்சாகவும் பேச்சாகவும், அவர்தம் கண்ணாகவும் காதாகவும், விளங்குவது. சமூகத்தின் பேச்சும் மூச்சும் நின்ற பின்னர் அவர்கள்—அச்சமூகம், என்றழைக்கப்படவும் இடமுண்டோ? தமிழ் மக்கள் தாமும்— தமிழ் மெல்ல அழிவுற்று விட்டால் பின்னர் தமிழராக உலவுதலும் கூடுமோ?

''தமிழன் என்றோர்
இனமுண்டு—தனியே
அவர்க்கொரு குணமுண்டு''

என்னும் தேசியக் கவிஞரின் பாட்டும் பொய்த்துப் போகாதோ!

தமிழின் பிறப்பு நிலமான —ஈழத்திலும் (இலங்கை) கூட இன்று 'தமிழ்' அழிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

தமிழை ஒடுக்கவும், தத்தம்மொழியை முழு ஆட்சி மொழியாக உயர்த்தவும்— கடல் கோளால் சிதைந்து போன தமிழ் நிலத்துடன் தொடர்பற்ற பிறமொழியாளர் தமது பெரும்பான்மை காட்டி—முயலுகின்றனர்.

தாய்மொழியும்—தம் இனமும் அழிக்கப்படும் நிலையில், அதனைக் காத்து நிற்கும் அறப்போரில்— ஈடுபட்ட நிலையில்தான் இன்றைய தமிழர்கள் உள்ளனர். தாய் மொழி காத்து—தம்மினத்தையும் மரபையும் நிலைபெற்றிடச் செய்யத் தமிழர்கள் உறுதிகொள்ளவேண்டும்! அந்தத் தாய்மொழிப் பற்றே—தமிழரை வாழ்விக்கும் அருமருந்தாம்!

## பொங்குக! பொங்குக!

— "சர்வசித்தன்" —

தையும் பிறந்திடப் பொங்கலும் வந்தது
தமிழர்க்கிது வொரு பொன் நாள்!—இந்த
வையம் செழித்திட, வறுமை ஒழிந்தது
வண்மை மிகுந்தது நீ காண்!

வருடம் முழுவதும் வறுமைப் பெரும்பிணி
வாயிலுழன்றவர் உள்ளம்;—நல்ல
திருநாள் இதுவென இன்பச் சிலிர்ப்புடன்
சிரித்து மகிழ்ந்திடும் நன்னாள்!

அன்று தொடங்கி எம் அருமைத் தமிழ்க்குடி
ஆயிரம் ஆண்டுகளாக (த்) — தை
என்று வருமெனக் காத்திருப்பாரவர்
இன்பமே பொங்கலி லன்றோ!

தை பிறந்தால் நல்ல வழியும் பிறந்திடும்
தமிழர்தம் முதுமொழி இஃது — எங்கள்
கையே நமக்கென்றும் நற்றுணை என்பதைக்
காட்டிடும் பொங்கலாம் இன்று!

பொங்குக! பொங்குக! தையினில் பொங்குக
உள்ளம் இனித்திடப் பொங்கல் — இங்கு
தங்குக! தங்குக! என்றுமே தங்குக
தமிழர்தம் வாழ்வினில் இன்பம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவில் நிற்பவை

## 18. உத்திகளும் சித்திகளும்

கடந்த வாரம் எழுதிய விடயங்களின் தொடர்பில் இன்னும் சிலவற்றைக் கூறுவேன். ஒரு விடயத்தைச் சாதிப்பதற்கு வேண்டிய உத்தியில் கைவரப் பெற்றவர் டொக்டர். சில ஆண்டுகளுக்கு முன் ஒருநாள், மலைநாட்டுத் தமிழர் சிலர் டொக்டரைக் காண வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு நாடாளுமன்றத்திற்கு ஓடி வந்தனர். டொக்டர் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர்; அடிமைத்தனத்தின் அடித்தளத்திலே அழுந்திக் கொண்டிருக்கும் அத்தமிழ் அன்னைகளுக்காக கனிந்திட்ட நெஞ்சினர். வந்தவர்கள், தமது உறவினர் ஒருவரை, எவரோ ஒருவரின் மொட்டைக்கடிதத்தைத் தொடர்ந்து பொலிசார் 'கள்ளத்தோணி'யெனக் கைது செய்து கும்பனித் தெரு முகாமில் வைத்திருப்பதாகக் கூறி அரற்றினர்; குறிப்பிட்ட ஆள் பல்லாண்டுகளாக இலங்கையில் வசித்து வருபவர் என்பதை உறுதி செய்யும் ஆவணங்கள் (documents) சிலவற்றையும் கொணர்ந்திருந்தனர்.

### கைப்பிடிக்குள்...

ஒருவர் கள்ளக் குடியேற்றக் காரரல்ல என உறுதி செய்யப்பட்ட தன் மேல் அவரை விடுதலைசெய்தற்கு குடியேற்ற வெளியேற்ற ஆணையாளருக்கு அதிகாரம் இருக்கிறது. எனினும் மேற் குறிப்பிட்ட ஆளிடமிருந்த சான்றுகள் இதற்குப்போதாமையால் இதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் பிரதம அமைச்சரின் தற்றுணியின் படி (discretion) மட்டுமே அவரை விடுவிக்க முடியும். டொக்டர் அவசர அவசரமாக பிரதம அமைச்சரை விழித்து விண்ணப்பமொன்றை எழுதுகிருர். அத்துடன் இருக்கக் கூடிய சான்றுகளையும் இணைக்கிருர். அடுத்து பிரதம அமைச்சரைத்தேடி உடனே ஓடுகிருர். உதவி கோரி வந்த அணியும் பின் தொடர்கிறது. அதோ... அங்கு மின் தூக்கியில் (lift) ஏற அடியெடுத்து வைக்கிருர் பிரதமர்—ஆம் பிரதமர் தான். "பொறுங்கள்... பொறுங்கள் ...பொறுங்கள்' (wait...wait... wait) எனக் கூறிக்கொண்டே ஓடிச்சென்று சட்டையில் பிடித்து அவரை வெளியே இறக்கி "தயவுசெய்து இதில் கையொப்பமிட்டு விட்டுச் செல்லுங்கள்" என்று தம் விண்ணப்பத்தை நீட்டுகிருர். டொக்டரின் கைப்பிடி இன்னும் சட்டையை விட்டுத் தளரவில்லை. பிரதமருக்கு விண்ணப்பத்தை ஏற்கலாமா விடலாமா என எண்ணக் கூட அவகாசமில்லை. ஏனெனில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் பார்த்துக்கொண்டு நிற்கின்னர். அவருக்கு நாகநாதனின் பிடியில் நிற்பது அவமானமாக இருக்கிறது. அந்தப் "போக்கிரி" நாகநாதனுடைய பிடியைத் தளர்த்துவதாக இல்லை. பொலிசை யா அழைக்க முடியும்? மற்றவர்கள் என்ன நினைப்பார்கள். பிடியை விட்டால் போதும் என்ற தர்மசங்கடமான நிலையில், "என்ன இது? என்ன இது?" (what is this?... what is this?) என்று கேட்டபடியே (ஆயினும் விண்ணப்பத்தின் நோக்கத்தை ஒருவாறு புரிந்துகொண்டு) மனமில்லாமல் டொக்டர் நீட்டிய பேனவை வாங்கி அவ்விண்ணப்பத்தை அங்கீகரித்துக் கையொப்பமிடுகிருர். டொக்டரும் உடன் தன் பிடியை விட்டு விட்டு "தாங் யூ" எனப் பிரதமருக்கு "சல்யூட்" அடித்து விட்டு வெற்றி வீரனுக குடியேற்ற வெளியேற்ற ஆணையாளரை நோக்கிப் பறக்கிருர்—அணி பின்தொடர.

★

### தூக்கத்தில் தாக்க...

அமைச்சரொருவரின் வீட்டுக்கு அன்று மூன்றுத் தடவையாக டொக்டருடன் சென்றிருந்தேன். முதல் இரண்டு தடவையும் பெரும் படையுடன் சென்று இறங்கியவர் அன்று தனியே சென்ருர் அவ்வமைச்சர் தொடர்பினான தொழிற்சங்கமொன்றுடன் டொக்டர் சம்பந்தப்பட்டிருந்தார். (அமைச்சரை அடையாளங் கண்டு கொள்ளாதவாறு அத்தொழிற் சங்கத்தின் பெயரைக் குறிப்பிடவில்லை) அத்தொழிற் சங்கத்தின் கோரிக்கைகளை விவாதிப்பதற்காகவே டொக்டர் சென்றிருந்தார். அமைச்சரைக் காண்பதென்ருல் முன்னேற்பாடு செய்து கொண்டு சென்று சந்திப்பது தான் முறை. அமைச்சுக்கு 'வாருனில்லை' முன்னேற்பாடு செய்தால் 'ஓடி ஒளிச்சிடுவான்' என்பது டொக்டரின் கருத்து. ஓரளவு நட்புணர்வுடனேயே 'அவன் இவன்' எனக் குறிப்பிட்டுப் பேசினூர். அமைச்சரைக் காண்பதற்கு காலை நேரம் அல்லது அவர் ஓய்வாயிருக்கும் மாலை நேரம் செல்லலாம். டொக்டர் சரியாக மூன்றுமணிக்குச் சென்று இறங்குகிருர். அமைச்சர் உறங்குவதாக வேலையாள் கூறுகிறுன்.

### கோழிபிடிக்க...

'கள்ளப்பயல் தூங்குகிருன் இப்பத்தான் பிடிக்கவேணும் வா' என்று என்னையும் அழைத்தவாறே கோழி பிடிப்பவரைப்போல பதுங்கிப் பதுங்கி அமைச்சரின் படுக்கையறையை நோக்கி முன்னேறுகிருர். நான் தயக்கத்துடன் வெளியிலேயே நின்றுவிடுகிறேன். டொக்டர் படுக்கையறைக் கதவைத் திறக்கவும் அமைச்சரின் மனைவி டொக்டரின் முயற்சியைப் புரிந்துகொண்டவராக"

"'ஐயோ பாவம் டொக்டர்; அவர் சுகவீனமாகப் படுத்திருக்கிருர்" என்கிருர். டொக்டரும் சளைக்காதவராக 'நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். அதனுல்தான் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்' என்றவாறே உள்ளே ஓரடிவைத்தவர், அமைச்சரின் மனைவி மீண்டும் இடையில் தலையிடாமல் அவரை வேலையில்டுபடுத்த விரும்பியோ என்னவோ, 'கண்மணி! எனக்குக் கொஞ்சம் தேநீர் கொண்டுவா' (get me some tea darling) என்று அந்த அம்மையாரிடம் கூறிவிட்டு அறையுள் நுழைகிருர். அம்மையார் தடுமாறியவராய் தேநீர் எடுக்கச் செல்கிருர்; அறையினுள்ளே என்ன ஆயிற்ருே அறியேன். மறுகணம் நித்திரைச் சோம்பலுடன் அமைச்சரும் அவரைத் தாங்கியவாறே டொக்டரும் வெளியில் வரக்கண்டேன்' 'உங்களுக்குத் தெரியாது, நாகா... உங்களுக்குத் தெரியாது... எனக்குச் சுகமில்லை' என அமைச்சர் கூறவும்... 'எனக்குத் தெரியும்... எனக்குத் தெரியும்' என டொக்டர் கூறவும், இருவரும் அமர்ந்து பேசத் தொடங்கினர்; அமைச்சரின் மனைவியாரும் தேநீருடன் வந்தார்.

டொக்டரின் இத்தகைய உத்திகள் எங்கும் எப்போதும் சித்தி பெற்றன என்று சொல்வதற்கில்லை. பெரும்பாலும் வெற்றி பெற்றிருக்கின்றன; சில விடயங்களில் 'பண்டார வெடிகளும்' தீர்ந்திருக்கின்றன. அரசியல் காரணங்களால் இடமாற்றம் செய்யப்பட்ட அரசாங்க ஊழியர் ஒருவரின் இடமாற்

—கரிகாலன்—

றத்தை நிறுத்துதற்காக அன்ருருநாள் நிரந்தரச் செயலாளர் ஒருவரைக் (இன்றைய நிரந்தரச் செயலாளர் அல்ல) காணச் சென்றிருந்தார். அமைச்சருடன் டொக்டருக்குப் பகைமை இருந்தது. அதனுல் அடுத்த படியான அந்தஸ்திலுள்ளவரிடம் சென்ருர். அவரும் அமைசசரின் தூண்டுதலால் டொக்டரைப் புறக்கணிக்கத் தலைப்பட்டார். செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்த நிரந்தரச் செயலாளர் தாம் அலுவலாக இருப்பதாகக் கூறி டொக்டரை வெளியே காக்கவைத்துவிட்டார். பொறுமையிழந்த டொக்டர் எரிமலையெனப் பொருமிக்கொண்டே வாயில் காத்த பணியாளையும் இடித்து விலக்கிக்கொண்டு உள்ளே சென்ருர். இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்படுகிறது. "நான் கூறுகிறேன் நீர் ஒரு பொது மக்கள் ஊழியன். நான் ஒரு பொதுமக்களின் பிரதிநிதி. எனக்கு ஊழியஞ் செய்யும் என உரிமையுடன் கேட்கிறேன்" (I say you are a Public Servant. I am a representative of the People. I demand you serve me) என்று டொக்டர் உரத்து உறுமியது கட்டடம் எங்கணும் எதிரொலித்தது.

"என்னுடைய கெட்ட காலம்தானே நான் எல்லாரையும் விட்டுவிட்டு இந்த மனிதரிட்டை வந்தது" என வெளியே நின்று அந்த எதிரொலியைக்கேட்ட அரசாங்க ஊழியர் தீனக்குரலில் ஓலமிட்டது எவ்வளவு தீர்க்கமானது! அவரது இடமாற்றம் ஆணித்தரமாக உறுதி செய்யப்பட்டது தன் வேலை பிழைத்தாலே பெரிய காரியம் என்று பேதலித்து நின்ருர் அவர்.

(அடுத்த இதழில் முற்றும்)

### சாதி, மத...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பெரும் நெஞ்சங்கள் போக்க இப் பொங்கல் திருநாளிலேயே வீர சபதம் எடுத்தால் விடுதலை என்பதால் நிரந்தரமாகவே விலகி நிற்க முடியாதா?

எம் ஈழத் தமிழகத்தில் சிறுகச் சிறுக சிதைந்து கொண்டிருக்கும் பொருளாதாரம்—வளர்ந்து போன சமூக நடைமுறைகள்—தூர்ந்து போய்க்கொண்டிருக்கும் தமிழ் நெறிகள்—கோணல் வாய்ந்த சாதி வழக்கங்கள் போன்றவைகளே எம் இனத்தை அரிக்கும் கறையான்களாகி விட்டன. இந் நிலைகள் மாற்றப்பட்டு—மக்கள் மத்தியிலே இருக்கின்ற மேடு பள்ளங்கள் சமத்துவமாக்கப்பட்டு அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு — அடிமைப் புத்தி நீக்கப்பட்டாலே தவிர தமிழினத்திற்கு உண்மையான விழா எதுவுமே இருக்கமுடியாது. அதுவரை இவ் விழாக்களெல்லாம் சம்பிரதாய விழக்களாகத்தானிருக்கும்.

### பொங்க வேண்டும்

—வி. த. குமாரசாமி—

அறிவு பொங்க வேண்டும் — நல்ல
ஆற்றல் பொங்க வேண்டும்
உரிமை வேட்கை தமிழன் மனதில்
ஓங்கிப் பொங்க வேண்டும்.

எழுச்சி பொங்க வேண்டும் — தமிழ்
உணர்ச்சி பொங்க வேண்டும்
இனத்தின் மானங் காக்க இளைஞர்
இன்றே பொங்க வேண்டும்.

திறமை பொங்க வேண்டும் — எங்கும்
தீது மங்க வேண்டும்
அறத்தின் வழியில் நடந்து தமிழன்
ஆட்சி பொங்க வேண்டும்.

பக்தி பொங்க வேண்டும் — பாரில்
பண்பு பொங்க வேண்டும்
சத்தியத்தின் பேரில் தமிழர்
வெற்றி பொங்க வேண்டும்;

மானம் பொங்க வேண்டும்—புண்(ணி)ய
தானம் பொங்க வேண்டும்
வானம் பொங்கி மழையினூலே
ஏனம் பொங்க வேண்டும்;

அன்பு பொங்க வேண்டும் — பேர்
அறமும் பொங்க வேண்டும்
இன்பம் பொங்க வேண்டும், மெங்கும்
ஏற்றம் தங்க வேண்டும்.

### கருணாநிதி....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும்? ஏன் அப்படி வரம் கேட்டாய்? என்று சகாதேவனை நோக்கி மற்றவர்கள் கேட்டார்கள். 'நான் ஜோசியம் தெரிந்தவன். அதனுல் கிருஷ்ணனைப்பற்றி எனக்குத் தெரியும். துரியோதனுதியர்களை முறியடித்த பிறகு நம்மையும் முறியடிக்க கிருஷ்ணன் திட்டமிட்டிருந்தான்; அதனுல் அப்படி வரம் கேட்டேன். இப்போது கிருஷ்ணன் அப்படி வரம் கொடுத்துவிட்டதால் கிருஷ்ணனே நினைத்தாலும் கூட நம்மைஅழிக்க முடியாது" என்று சகாதேவன் சொன்னுன்—இப்படி பாரதக் கதை சொல்லுகிறது.

"இதைப்போல, பிறந்த நாளன்று இராஜாஜிக்கு வாழ்த்துக் கூற நான்சென்றிருந்தேன். 'என்ன வேண்டும்' என்று ராஜாஜி என்னைப் பார்த்துக்கேட்டார்; உங்கள் அன்பு வேண்டும் என்று கேட்டேன். 'என் அன்பு எப்போதும் உங்கள்பால் உண்டு' என்று ராஜாஜி கூறினூர்.

'காங்கிரஸ் என்ற துரியோதனுதியர்களைத் தோற்கடித்தபிறகு தி.மு. கழகத்தவராகிய நம்மையும் தோற்கடிக்க ராஜாஜி திட்டமிட்டிருந்தார் கண்ணு —நாங்கள் ஏமாற மாட்டோம்' என்ற வகையில் அவரிடமே நாம்வரம் பெற்றுவிட்டோம். வரம் கொடுத்த அவராலேயே கூட இனி நம்மை அழிக்க முடியாது."

இவ்வாறு கலைஞர் கருணாநிதி அன்றுகூறியிருந்தார்.

தமிழ்ப் பகைவர்களும் தமிழ்ப் பகைவர்களின் கையிலுள்ள முதலாளித்துவ ஏடுகளும் ஒன்று திரண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்களின் ஆதரவையும் எப்படியோ பெற்று எப்படியும் கழக ஆட்சியை வீழ்த்திட கங்கணம் கட்டியபடி 1971 பொதுத் தேர்தல் சமயத்தில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தனர்; தமிழ் நாட்டின் பெரிய பத்திரிகைகள் எல்லாம்இந்து எக்ஸ்பிரஸ்,மெயில் போன்ற ஆங்கில ஏடுகள் உட்பட— அனைத்தும் தி.மு.க. எதிர்ப்புப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன.

தி. மு. கழகத்துக்கு இம்முறை 15 இடங்கள் கூடத் தேருது; ராஜாஜி எதிரணியில் இருப்பதால் தி.மு.க அழிந்துவிடும் என்று எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசாரம் செய்யப்பட்டது.

தி.மு.கழக ஆட்சிக்கு எதிராக மிகவும் கேவலமான—பொய்ப்பிரச்சாரங்களை திட்டமிட்டு நடத்தி வந்தனர் எதிரணியினரும் அவர்களது ஏடுகளும்;

ஈழத்துத் தமிழ்த் தினசரிகளும், தி. மு, கழகத்துக்கு எதிரான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இங்கு வெளியிட்டு வந்தன.

என்னதான் பிரச்சாரம் செய்தாலும்—எப்படித்தான் தலைகீழாக நடந்தாலும்— அண்ணு ஏற்றிவைத்த ஆட்சிச் சுடரொளியை அணைத்து விடுவதற்கு தமிழக மக்கள் கிஞ்சித்தும் இடம்தரமாட்டார்கள் என்று என் னுள்ளம் உள்ளூர உறுதியாக நம்பினுலும், மாற்ருர் நடத்திவந்த பிரசாரங்களை பார்த்தபோது ஏனே மனம் சற்று துணுக்குற்றுக் கொண்டேயிருந்தது.

எதற்கும் தமிழ் நாட்டுக்கு ஒருமுறை சென்று அரசியல் நிலைமைகளை ஆராய்ந்து திரும்பினுல் என்ன? இப்படி திடீரென்று ஒரு எண்ணம் என் மனதில் எழுந்தது. அந்த என் எண்ணத்துக்கு உரமூட்டினூர் 'நியூமாரலஸ்' நண்பர் ஒருவர்;

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

(3ம்- பக்கத் தொடர்ச்சி)

பொருள் அதாவது உடலைக் கெட்டியாக்கி மயிர் சுருக்கும் பொருள்கள் பயன்படுத்தப் பட்டனவாம்; இரண்டாவதாக விரைப்பொடி மணம் தந்தது; மூன்றுவது ஓமாலிகைப்பொடி மென்மையும் பளபளப்பும் தொய்வும் அளித்தனாம்; இவற்றை மாதவி பயன்படுத்தியதாக சிலப்பதிகாரம் கூறுகிறது.

பத்துத் துவரினும், ஐந்து விரையினும்
முப்பத்திருவகை ஓமாலிகையினும்
ஊறின நன்னீர் உரைத்த நெய்வாசம்
நாறிடும் கூந்தல் நலம் பெற ஆட்டி
புகையில் புலர்த்திய பூமென் கூந்தல்...''

இப்படி சீருடனும், சிறப்புடனும், வியத்தகு நாகரிக முதிர்ச்சியுடனும் அற்றை நாளில் நம்முன்னேர் — வாழ்ந்த கதையை வரலாறு பேசுகிறது — இன்று வாழத்தெரியாமல் அடிமைகளாக ஊமையாக காலம் தள்ளிக்கொண்டிருக்கிறோம் நாம்!

நண்பா, இன்று தமக்கென தனி நாடமைத்து தங்கள் இன்னுயிராம் வங்கமொழிக்கு வாழ்வு தந்திட்ட பெருமிதத்துடன் வீரத் தலைவர் ஷேக் முஜிபுர் ரகுமான் தலைமையிலே வீரநடைபோடுகின்றனரே வங்காளிகள்! இவர்கள் கூட அன்று தமிழ் மக்களுக்கு திறை செலுத்தி வாழ்ந்ததை வரலாறு கூறுகிறது!

தென்னவர் வில்லவர்
கூபகர் சாபகர்
சேதிபர் யாதவரே
கன்னடர் பல்லவர்
கைதவர், காடவர்
காரிபர் கோசலரே
கங்கர் கராளர்
கவிந்தர் துமிந்தர்
கடம்பர் துரும்பர்களே
வங்கர் இலாடர்
மராடர், விராடர்,
மயிந்தர், சயிந்தர்களே,
சிங்களர், வங்களர்
சேகுணர் சேவணர்
செய்ய வரையணரே
கொங்கணர், கொங்கர்
குலுங்கர் சௌந்தியர்
குச்சரர் கச்சியரே
மத்தவர் மத்திரர்
மாதவர் மாகதர்
மச்சர் மிலேச்சர்களே
குத்தர், குளத்தர்
சடக்கர், துருக்கர்
குருக்கர், வியத்தர்களே

நாற்பத்தெட்டு நாட்டு மன்னர்கள் குலோத்துங்கனுக்கு திறை செலுத்தியதாக இதன் மூலம் அறிகிறோம்—அதிலே சிங்களரும், வங்காளிகளும் இடம் பெற்றிருந்ததையும் காணுகின்றோம்; அன்று திறை செலுத்தி வாழ்ந்த இனங்கள் இன்று தமக்கோர் நாடு அமைத்துவிட்டன! திறை வாங்கிப் பெருமையுடன் வாழ்ந்த இனம் அடிமைத் தனத்தில் சிக்குண்டு அழிந்தொழிந்துபோவதை அனுமதித்திடப் போகிறோமா?

நண்பா, சுதந்திரம் என்பது மற்றையோர் தர கை நீட்டி வாங்கும் ஒரு பொருளல்ல—நம்முடைய இரத்தத்தால் நம்முடைய தியாகத்தால் நாம் உருவாக்க வேண்டியது தான் சுதந்திரம்!

வங்கத்து விடுதலைப்போர் நமக்கெல்லாம் நம்பிக்கை நட்சத்திரமாகிவிட்டது. வங்கத்துப் பெருந் தலைவர் ஷேக் முஜிபுர் ரகுமான் தனது விடுதலை இலட்சியத்துக்காக சாவையே தழுவுக்கத் தயாராக இருந்திட்ட கதையை கேட்டபோது நம் உள்ளமெலாம் நடுங்கின! எத்தனை பெரிய மனிதர் அவர்; எத்துணை உறுதி மிக்கது அவரது இதயம்; அந்த உறுதியல்லவா வங்கத்துக்கு விடுதலை வாங்கித்தந்தது. அந்த உறுதியல்லவா இன்று உலகத்திலுள்ள விடுதலை வீரர்களுக்கெல்லாம் பெருமையைத் தருகின்றது!

வங்கத்து விடுதலைச் சிங்கத்துக்கு மரணக் குழியுமல்லவா தோண்டப்பட்டிருந்ததாம்—அவரைத் தூக்கிலிட்டபின்னர் புதைப்பதற்கு! ஆயினும் சுதந்திர வேட்கை கொண்ட அந்த உள்ளம் தூக்குமேடைக்கா அஞ்சும்?

"எனது மக்கள் என்னைத் தங்கள் சனதிபதியாகத் தேர்ந்தெடுத்தபோது தூக்குமரத்தில் தொங்கப் போகிற நாளை எதிர்நோக்கி சிறையில் கிடந்து தவித்தேன்—அதுவும் கற்பனை கூடப் பண்ண முடியாத பயங்கரத் தனிமையில் சிறைவைக்கப்பட்டிருந்தேன். வெளியுலகில் எவ்விததொடர்பும் இல்லாமல் வாழ்வதன் கொடுமையை சிறைவாசத்தின்போது நன்கு அனுபவித்து விட்டேன்.

'என்மீது விசாரணை நடாத்தி தூக்குத் தண்டனையும் விதித்து விட்டார்கள். மனத்தளவில் சாக நான் தயாராகத்தானிருந்தேன். ஆயினும் பங்களா தேசம் விடுதலை பெற்றுவிடும் என்ற நம்பிக்கைமட்டும் என்னுள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது—'

என்று ஷேக் முஜிபுர் கூறியதைப்படித்த போது இவனன்றோ விடுதலைத் தலைவன் என்று வியந்திடுகிறோம்.

ஆம் நண்பா, விடுதலை வேட்கையை, சிறைச்சாலைக் கொடுமைகளாலோ சித்திரவதைகளாலோ—அழித்துவிட முடியாதென்பதையும், விடுதலை விரும்பிகள் தங்கள் இலட்சியத்தை எது நேரினும் கைவிட மாட்டார்கள் என்பதையும் ஏகாதிபத்திய வாதிகளுக்கெல்லாம் எடுத்துக் காட்டிவிட்டது ஷேக் முஜிபுரின் உறுதி!

வங்க இனத்தைவிட பழமையானது நம் இனம்; வங்கமொழியைவிட உயர்ந்தது, சிறந்தது, வளமிக்கது, தொன்மையானது நமது செழுந்தமிழ்; வங்காளிகளுக்குள்ள வரலாற்றுச் சிறப்புக்களைவிட நமது வரலாறு மிகவும் பழைமையானது, பெருமைமிக்கது; உலகளாவியது; வங்க இலக்கியங்களைவிட சிறந்த இலக்கியங்களுக்கு சொந்தக்காரர்கள் நாம்!

ஆயினும் வங்காளிகள் தங்கள் மொழிக்கு ஓர் அரசு அமைத்துவிட்டார்கள்; தங்களுக்கென ஒரு தாயகம் கண்டு விட்டார்கள்! நாம் மட்டும் அடிமைத்தனத்தை ஏற்று அழுங்கி அழிந்துபோகப் போகிறோமா? வங்காளிகளால் முடிந்தது நம்மால் ஏன் முடியாது?

ஏன் முடியாது! நிச்சயம் முடியும் நம்மால் என்று நீ கூறிடுவாய் என்பது எனக்குத் தெரியும் நண்பா, தமிழரசுப் பாசறையின் படைவீரனல்லவா நீ! இன்று பொங்கல் திருநாளில் பொங்கி மகிழ்ந்து சுற்றம் சூழ மங்கை நல்லாளுடன் களித்திரு! ஏனெனில் நாளை விடுதலைப்போரில் கடமையாற்றிட — களத்தில் குதித்திட — உனக்கு அழைப்பு வந்திடலாமல்லவா?

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# தாய்த்திருநாட்டின் விடுதலையைக் காக்க துளி இரத்தம் இருக்கும்வரை போராடுவேன்!

## டாக்காவில் முஜிபர் வீரமுழக்கம்!

"நீர் செய்த குற்றங்களுக்காக மன்னிப்புக் கோரும்" என்று என்னிடம் கூறினர்கள் பாகிஸ்தான் அதிகாரிகள் நான் சிறையிலிருந்தபோது; அந்தக் கோரிக்கையை வெறுத்தொதுக்கினேன் நான். பாகிஸ்தான் அதிகாரிகளிடமிருந்து மன்னிப்புக் கோருவது என்பது எனது தாய் நாட்டிற்காக—நான் பிறந்த பொன்னாட்டிற்காக — எமது ருமைசவங்காளத்திற்காக—போராடும் வீரர்களுக்குத் துரோகம் செய்வதாக இருக்கும். எனவே அவர்களின் கோரிக்கையை நான் வெறுத்தொதுக்கினேன்.

—டாக்கா நகரில் பத்து லட்சம் மக்கள் முன்னிலையில் உரையாற்றிய வங்கத் தந்தை ஷேக் முஜிபுர் ரகுமான் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். இத்தகவலை அவர் கூறியதும் அங்கு திரண்டிருந்த ஜனசமுத்திரம் "வாழ்க முஜீப்" "வாழ்க முஜீப்" என முழங்க ஆரம்பித்தது.

பாகிஸ்தான் சிறையில் பத்து மாதத்தைக் கழித்த வங்கச் சிங்கம் உணர்ச்சிப் பிழம்பாக மாறி நாற்பது நிமிடம் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வீரவுரையின் சுருக்கம் இது தான்—.

வங்காள நண்பர்களே! பாகிஸ்தான் சிறையிலிருந்து இப்பொழுதுதான் திரும்பி வருகின்றேன். கடந்த பத்து மாதங்களில் இங்கு நடந்து விட்ட கொடூரச் செயல்களைப் பற்றிக் கதை கதையாய்க் கேள்விப்பட்டேன். வெள்ளிக்கிழமை திரு. பூட்டோ என்னைச் சந்தித்தார். மேற்குப் பாகிஸ்தானுடன் ஏதாவது தொடர்பை வைத்திருக்குமாறு வேண்டிக்கொண்டார். பெயரளவிலாவது பாகிஸ்தானுடன் இணைந்திருங்கள் என்று மன்றுடினர். மேற்குப் பாகிஸ்தான் மக்களுடன் எமக்குக் குரோதம் இல்லை; ஆனால் எனது மக்களுக்கு அவர்கள் இழைத்துவிட்ட கொடுமைகளுக்கு — கட்டவிழ்த்து விட்ட கொடூரச் செயல்களுக்கு—அவர்கள் கஷ்டப்படத்தான் வேண்டும். எனவேதான் இங்கு இப்பொழுதே அறிவிக்கின்றேன். மேற்குப் பாகிஸ்தானுடன் நாம் எத்தகையதொடர்பையும் வைத்திருக்கப்போவதில்லையென்று. எமது நாட்டிற்கும் மேற்குப்பாகிஸ்தானிற்குமிடையேயுள்ள தொடர்புகள் நிரந்தரமாகத் துண்டிக்கப்பட்டு விட்டன. நீங்களும் வாழுங்கள், நாங்களும் வாழ்வோம்.

மேற்குப் பாகிஸ்தானியரே! எனது நாட்டில் ஒரு கோடி மக்களை நீங்கள் கொன்று குவித்துவிட்டீர்கள். எனது தாய்மாரையும், சகோதரிகளையும் மானபங்கப்படுத்தினீர்கள்; (அப்பொழுது அவர் அழுதுவிட்டார்) பல்லாயிரக்கணக்கான வீடுகளை தீக்கிரையாக்கினீர்கள். ஒரு கோடி மக்களை அண்டை நாடான இந்தியாவிற்கு அடித்து விரட்டினீர்கள். அப்படியிருந்தும் நான் உங்கள் மீது பகைமை பாராட்ட விரும்பவில்லை, உங்கள் சுதந்திரத்தை நீங்கள் அனுபவியுங்கள். எங்கள் சுதந்திரத்தை நாங்கள் அனுபவிக்கின்றோம். வங்காள தேசம் இன்று சுதந்திரம் அடைந்துவிட்டது. என்றும் அது சுதந்திரமாக வாழும்.

மற்ற நாடுகள் எல்லாம் வங்காள தேசத்தை அங்கீகரிக்கும் என நம்புகின்றோம். ஐக்கிய நாடுகள் சபையில் எம்மை உறுப்பினராக்கும்படி வற்புறுத்துவோம். ஐ. நாவில் எமக்கு இடம்கொடுக்கப்படல் வேண்டும். எமக்கு இடம் கொடுப்பதைதவிட வேறு வழியில்லை; நாம் ஒருபோதும் எமது சுதந்திரத்தை விட்டுக்கொடோம்.

தொழிலாள நண்பர்களே விவசாயப் பெருமக்களே! முக்தி பாஹினி வீரர்களே! கிழக்கு வங்கப் படையினரே யுத்தத்தின்போது சீரழிந்த எமது தாய்த்திருநாட்டைக் கட்டியெழுப்ப முன்வாரீர் எமக்கு உடைகள் தேவை; வீடுகள் தேவை; வறிய எமது மக்களுக்கு மற்றப் பொருள்களும் தேவை. இவற்றை உற்பத்தி செய்ய இன்றே சபதம் எடுங்கள். அரசாங்க ஊழியர்களே! அயராது உழையுங்கள். லஞ்சம் என்ற பேச்[illegible] இடமிருந்[illegible] [illegible] கவே முடியாது.

மேற்குப் பாகிஸ்தானிற்கு ஒரு எச்சரிக்கை விடுக்க விரும்புகின்றேன். ஏதாவது வல்லரசின் ஆலோசனையின் பேரில் வங்காள தேசத்தை அழித்து விட முயலாதீர்கள். அப்படி நடக்க நாம் அனுமதியோம். எமது தாய்த் திருநாட்டின் மண்ணில் நான் இப்பொழுது நிற்கின்றேன். எனது இறுதித்துளி இரத்தம் இருக்கும் வரையும் எமது சுதந்திரத்தைப் பாதுகாக்கப் போராடுவேன்.

சோஷலிஸம், ஜனநாயகம், மதச்சார்பின்மை ஆகியவையே எமது கொள்கையாகும்.

இன்று நான் உணர்ச்சியால் உந்தப்பட்டுள்ளேன். நீண்ட நேரம் பேசமுடியாமலிருக்கிறது. ஒன்பது மாதங்களுக்கு என்னைத் தனியான அறையில் அடைத்து வைத்தனர். கைது செய்வதற்கு முன்பிருந்த முஜீப்பல்ல இப்பொழுது உங்கள் முன் நிற்பது. நான் இப்பொழுது களைத்துப்போயிருக்கின்றேன். ஜெய் பங்களா.

## எடுத்ததற்கெல்:..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிந்து தலைமுழுக வேண்டிய "ஆபரேஷன் கத்தி"யையே நாம் இப்போதும் பயன்படுத்திக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது!

கவிஞன் காணும் எதிர்காலக் காட்சி செயல்படாதபடி இங்கே 'வங்கங்கள்' நிகழ்ந்து கொண்டேதான் இருக்க வேண்டுமா? மக்கள் மாபாரத, ராமாயண காலங்களைத் தாண்டி வரவே கூடாதா? புறத்தே எழுந்து பெருகி நம்மை இணைத்து வைக்கும் அறிவை பயனின்றி அடிக்கும் தேசியம் என்னும் மூடத்தனம் வலுப்படுத்தப்பட்டே தான் வரவேண்டுமா?... இந்தக் கேள்விகளை அரசுஇயல் என்று ஒதுக்கி விடாமல், அறி இயல் நோக்கிலே எல்லோரும் சிந்தித்து, ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரவேண்டும்.

## வாழ்த்துக்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், பாவிப்பாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப்பவுடர் பாவியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் தியேட்டர்ஸ்சாரின் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

# 2வது வாரமாக காட்சி தருகின்றது

செல்லமகால் (தொட்டாஞ்சேனை) | நெல்சன் (திருமலை) | இம்பீரியல் (மட்டுநகர்)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, நாகேஷ்,

மற்றும் பலர் நடித்த

# சுமதி என் சுந்தரி



தைப்பொங்கல் வெளியீடு

இப்பொழுது

வெற்றிகரமாக காட்சியளிக்கின்றது

கெப்பிட்டல்—பிளாசா

(கொழும்பு) (வெள்ளவத்தை)

மைலன் வெலிங்டன் லிடோ

(ஜிந்துபிட்டி) (யாழ் நகர்) (யாழ் நகர்)

சிவாஜி, பத்மினி

ஸ்ரீகாந்த், நாகேஷ், ராகவன்,

தங்கவேலு ரமாபிரபா

—நடித்த—

சிவாஜி பிலிம்ஸ்

# வியட்நாம் வீடு

பொங்கல் வெளியீடு

கிங்ஸ்லி — விஜயா

(கொழும்பு) (மட்டுநகர்)



ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ

அசோகன் — சாவித்திரி

நாகேஷ்

நடித்த

# மனசாட்சி

சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸ்சாரின் பொங்கல் வாழ்த்துக்கள்



4வது வெற்றி வாரமாக

செண்ட்ரல் (மருதானை) | ராணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்

விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி

வி. எஸ். ராகவன் நடிக்கும்

# சவாலே சமாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1972-ம் வருடம் ஜனவரி மாதம் 16 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் சோமா மகேசன்